உ

திருவருள் துணை

ஆறைமாநகர்

சாமிநாதப்பிள்ளையென்னும்

தெய்வச்சிலையாபிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

மநுநீதிகாதல்.

இஃது

மயிலம்

சுப்பிரமண்யசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

சென்னை - ஆச்சாரப்பன்தெரு 84-வது.நெ.

உ

கடவுள் துணை.

மநுநீதிகாதல்.

—(⌣)—

விநாயகர் துதி.

யானைமுகவானையுமை யாளனார்பாலகனே
ஞானமுதலானகுருநாதனே-மாநிலத்தில்
ஆதிமனு நூலினுரை யாததனையானுமொரு
காதலெனவேவோதருள் காண்.

புத்திவருமெஞ்ஞானப் போதமுறும்புண்ணியமுஞ்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே - நித்தநித்தம்
சாதினையதாய்ப்புவியில் சாமிநாதன்சொல்மனு
நீதிநூல்பார்த்தால் நிதம்.

வாணிதுதி.

பூமேவுலோகம் புகழுமநுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்துயான்பாட
மூலகணேசன் முளரிபதம்போற்றி
வாலைசரஸ்வதியென் வாக்கிலிருந்தருள்வீர்.

அவையடக்கம்,

வேதமுறைசொன்னதிந்த மேதினியிலுள்ளமநு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினார்முன்னோர்கள்

வள்ளுவனாரெவரைமுதல் வழுத்துமநுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிற்றகப்பைமுகந்தாற்போல்

மாலைசதக மநுநீதிசாரமென்றும்
ஞாலமதிற்கவிஞா நவின்றார்பலநூலால்

பண்ணும்பலநூலிற் பாடும்பொருளதனை
எண்ணியெந்தன் சிந்தைக் கிசைந்தேயறிந்தமட்டும்

ஞாலமதிலுதிரும் நவமணியெல்லாம்பொருக்கி
மாலையாய்க்கோர்த்த வகையாகவிந்நூலைக்

காதலுடனியானுமொரு காதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின் வல்லோர்மனமகிழ

ஆக்கியோன்பெயர்,

மாவளஞ்சேர்செம்மி வாள்வாடன்மிக்கான
பூவைசியனென்னும் புகழ்படைத்தகங்கைகுலன்

ஆதிவையைசங்குமுக மாறைந்தானராம
நாதாவேள்பாலன் கவினகவிரஞ்சிதவான்

சீலமிகுமமூர்தச் செந்தமிழின்பாவினஞ்சொல்
மாலோனருட்சிறந்த மாபாரதப்ரசங்கன்

கையுற்றநெல்லிக் கனிபோலறியவென்று
தெய்வச்சிலையானுரைத்த தெள்ளமிர்தமாமிதுவே

உற்றதொருகாவேரி யொன்றாய்ப்பெருகிவரச்
சிற்றாறல்நீருமதிற் சேர்ந்தங்கேயோடுதல்போல்

சந்திரனோடம்பரத்திற் றாரகைகள்வாழ்வதுபோல்
செந்தமிழோர்முன்னே சிறியேனுரைத்ததமிழ்

புன்சொற்குதலையுங்கள் பிள்ளைமொழிபோல்மகிழ்ந்து
என்னசொலிதனைநித மின்பமெனக்கொண்டருள்வீர்.

நூற்பயன்.

சத்தியாசத்தியமுஞ் சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதர்மங்க ளுதவியுதவாமை

தன்மனைவிமைந்தரொடு தகமையுடன்வாழ்வதும்
பின்மனைவிவேசையர்கள் பேதத்துளாவதும்

மானுமீனம்வாழ்வு மகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயர்கீர்த்திப்ர தாபம்பரிமளித்தல்

துற்பிறவிதுற்சனர்கள் சோரமுடனுக்கினைகள்
நற்பிறவியாயுள்விர்த்தி நற்பதங்கள்நல்லறிவு

கற்பனைகளொப்பனைகள் கயவர்குணவிலாசம்
எப்போதுந்தாளாண்மை யென்றுநடவாமை

காலத்தின்கற்பனைகள் கடவுளால்நிர்ணயங்கள்
ஞாலமதில்நன்றியுட னற்றவர்பத்திமுத்தி

சீதேவிமூதேவி சேரிடங்கள்தானுமநு
நீதிமுறைவறுமை நிச்சயமாய்சேரிடங்கள்

சேராவிடம்லோபி சின்னத்தின்பாங்குகளும்
பே[illegible]னமாதா பிதாவவர்வளாவதுவும்

இருந்துமிறந்தோர்க ளிறந்துமிறவாதார்
மருந்துதவும்பண்டிதத்தின் மார்க்கமனத்தூக்கஞ்

சுத்தமசுத்தங்கள் தோகையரிலட்சணங்கள்
மெத்தப்பெரிகரிது மெலியதானங்கொடிது

மிஞ்சுங்கொடுமையினால் மின்னார்களாசையினால்
வஞ்சகத்தினாலிறந்தோர் மாறாதபேறுபெற்றோர்

இத்தகைமையாவதுட் னின்னமின்னம்பலத்தாய்.
சுத்தமுடன்முந்நூலோர் சொன்னபடியேயுரைத்தேன்
நன்னயஞ்சேரிந்நூலை ஞானமெலாந்தானறியச்
சொன்னதொருபாட் றுரைகையுமோமாயிரமாம்
பாடினேனிந்நூலைப் பயன்றிந்தவுத்தமர்க்கு
ஈடுண்டோநல்லறிவுக் கின்னமொருநூலுளதோ

வேதியரொழுக்கம்,

ஆரணங்களோதுவதும் யாகாதிசெய்வதுவும்
மீறுகாயத்திரியால் வினையெல்லாந்தீர்ப்பதுவுங்
கல்லும்பிருதிமிக்க கானகமரந்தாம்பூலம்
எல்லாச்சுலையுமரு ளெய்தும்படிமுடித்தால்
நன்னயமால்மாரிபெய்து நாடுசெழிப்பதுவும்
மன்னரசெங்கோலு மறையோர்மகிமையன்றோ

அரசரொழுக்கம்.

தேசத்தியற்கை தெரிந்தமனுநீதி
வாசற்பிரதானி வாய்மைகுறிப்பறிதல்

தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தல்சத்தியமாம்
மன்னுங்குடிகளிலே மாறுவபிமானம்

வங்கிஷத்திலுள்ளோர் மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத் தராதரமாய்க்காப்பதுவும்

காலமிடமறிதல்மிக் கானதர்மசிந்தனைகள்
ஞாலமிசைகீர்த்திப்ர தாபம்பரிமளத்தில்

தேவதாபத்தியுடன் சிட்டர்பரிபாலனமும்
மேலவராந்துட்டர்களை விரைந்தடக்குமாக்கினையும்

மாசனங்கள்மீதிலபி மானமதுபன்னுன்கும்
ராசநீதத்தி னலமென்றுரைத்திடுமாம்

வர்த்தகரொழுக்கம்.

தானறிந்தவாணிபமுந் தப்பாநிறைவசன
மானவரோதயத்துக் கதிகஞ்சிலவழியார்

கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செய்வா ரிசைவாக்கிசைவார்கள்

பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தில்மிக்கான வணிகர்குலமார்க்கமிர்தம்

மறையோர்க்குமங்களமு மன்னவர்க்கும்வல்லபமுங்
குறையாதவர்த்தகர்கள் கொள்வினையும்விற்பனையும்

வேளாளரொழுக்கம்.

ஆகமவேதங்கள்தே வாலயம்விளங்குவதும்
மேகம்வருஷிப்பதும் வேந்தர்கள்செங்கோன்முறையும்

பாரிலேதர்மபரி பாலனங்கள்மேலுமுயர்
சூரவலுவுத் தொழிலாளர்சீவனமும்

தாளாதகீர்த்தியுடன் றரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிபெருமையன்றோ

தருமநீதி.

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றி மற்றுயர்கேடுளதோ

தர்மாதர்மமிரண்டுஞ் சதகோடிநாட்செயினும்
அம்மாத்திரமு மனுபவித்துதீருமன்றோ

எண்ணும்பலபொருளு மிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்கள்ரண்டும் போவதில்லையுன்னைவிட்டு

பொன்னுடையாபரணப் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமூறுதானமுண்டோ

தன்னாற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தருமத்தை முக்கியஞ்செய்தலுத்தமுமாம்.

பாவபுண்ணியமிரண்டு பல்லாக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமும்பாவமுமாங்

கோணுதணுவளவுங் குறையாதவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம்

உண்ணறியவாழ்வு மெய்தும்பெருந்தவமாம்
புண்ணியமொன்றில்லாதேல் புனல்நிறைந்தகாடாகும்

ஏதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து

வாக்குசரீர மதனாற்சகாயங்கள்
ஏர்க்கவேசெய்வோர்க் கிகபரமவந்தெய்திடுமே

எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்தவர்கள்
புத்திரருமத்திபமாய்ப் போவார்நரகமதில்

மன்னருள்நீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்னமின்ன மூண்டுபதின்மூன்றுரைப்பார்

சேனைகுடியுஞ் சினேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும்

மிச்சமறிவீகை மேலுந்தயிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்குந்

தூங்காண்மைகல்வி யுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசக்கு

யானைகுதிரைபடை யானுடனேயாலயங்கள்
ஆனநல்லதர்மமதி னினைவுடனேயிம்மூன்றும்

ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையுந்

தக்கமரியாதை தயவுக்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமந்தராசாவை

ராசசிங்கமென்பரிவர் நாட்டினிற்பசிபிணியும்
மாசிலையாம்வருமை வாராதென்றேயுரைத்தார்

தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால்

தூன்னடக்கையென்றுமகா தோஷம்வந்துசூழுமென்று
நின்மலமாமென்று நிகழ்த்தினார்முந்நூலை

ஆலரசுவேம்பிதுமூன் றுளதிலேயொவ்வொன்று
மேனும்விளாநெல்லி வில்வமதில்மும்மூன்றும்

அன்பாகதெங்கு மாமைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமீதொன்பதையும்வைத்தவர்க்குத்

தரணியிலேயெந்நாளுந் தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மநுநூலில்

அன்னைதந்தைசுற்றங்க ளாதியிலேநம்பினவர்
முன்னுதவிசெய்தவர்கள் மிடியுற்றுவந்தவர்கள்

தக்கபெரியோரைச்சரணமென்றடைந்தவர்கள்
மிக்கவெளியோர்கள் மேனுளிற்சேவகரை

கைகழுவச்செய்யாமற் காப்பாற்றுமுத்தமர்க்கு
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம்

தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தவுத்தமர்க்கு
என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே

மாமறையோரேமுதலாய் மற்றுமுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனெண்ணெய் தேய்ப்பவர்கள்தங்களுக்கும்

மறையோர்க்குத்தொண்டுசெய்தமாதாவைத்தெய்வமென்போர்
கறவைதனைக்கண்டவுடன் கையாற்சொரிபவர்க்கு

எண்ணுமற்கோடி எக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்று புகன்றார்மநுநூலில்

துர்மார்க்கர்தங்குடியைச் சுத்தமாகக்கெடுத்து
நன்மார்க்கமுள்ளசில நற்குடியைக்காத்திடலாம்

அறக்குப்படித்தானு மவர்கடனைக்கெடுத்து
சிறப்புற்றப்பட்டணத்தைச் சீர்திருத்திக்காத்திடலாம்

வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்காக்க லாகுமதிற்பாவமில்லை

என்றுமுன்னாள்மாயவனு மேயரவானைப்பலியாய்க்
கொன்றிடப்பாண்டவற்குக் கூடியதிவ்வாறாகும்

தீபமொன்றுலட்சந் திரிகொளுத்தினுமந்தத்
தீபங்குறையாத செய்கைபோலெந்நாளும்

தலமீதிலோயாத் தானதருமஞ்செய்தவர்க்கு
மலர்மாதாலுண்டாகும் வாழ்வதுவுங்குன்றாது

நன்மையேதர்மமதி னாலேவரும்தாழ்வு
துன்மைவருவதில்லை தூயமனேநன்றாது

துன்மைதர்மத்தாற் றுலங்கும்பெருவாழ்வு
நன்மைதரமாட்டாது நல்விர்த்தியாகாது

தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்யவென்று
வறுமைவந்தால்தாம மதுசெய்யக்கூடாதே

காய்பழங்கள்பூவிலைகள் கதித்தமரங்களிலே
வாய்வுசென்றால்நற்கனிகள் மட்டுமுதிராமல்

தக்கபழங்காய்பூ தளிர்முதலாயுதிரும்
பக்குவம்போற்கெற்பமுதற் பயந்தமனுக்களிலே

சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சார்வதில்லை யாக்குமென்றெண்ணவொண்ணு

என்னவயதானு மியல்புவரும்வேளை
நன்னயஞ்சேர்தர்மஞ்செய் தாலிதுவேயுத்தமமாம

பண்டுசெய்தபுண்ணியமும் பாவமொன்றுஞ்சொல்லும்விதம்
ரண்டுமனுபவிப்பா ரெக்காலமானாலும்

நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம்

வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொர்க்க
வாசற்கதவு மாறாதடைத்திருக்கும்

உப்பிலாக்கூழு முளமகிழ்ந்துதான்கொடுத்தால்
ஒப்பிலாப்பாலமிர்த மொக்குமென்றார்முன்னோர்கள்

பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலும்
மிகவானநஞ்சுநஞ்சுக் கெட்டிக்காய்கொப்பிடலாம்

ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனாற்போல
நாட்டமேவாவாழ்வு நாளுக்குநாள்குறையும்

கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுக்கர்மங் கொடுத்தாரேயாமாகில்

வானுளேபோகும் வழியடைக்குங்கல்லென்று
கோணாதவாய்மை குறளிலேசொன்னாரே

ஆறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்துசுற்றதெய்வம்விதிர்தமக்காம்

இல்லறத்தில்வாழ்ந்தாலிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னாரே

பாவத்தாற்பொன்றேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்க ளொள்ளளவும்வாராதே

தர்மத்தாற்றேடித் தாரதாமுங்கண்டறிந்து
தன்மையுடனவந்தோர் தமக்குவிருந்தளித்து

இன்னம்வருவிருந்துக் கெதிர்ப்பார்த்திருக்கின்ற
வன்னயவான்விடந்த லட்சுமியிவிடாரும்

பூமியிலேவித்தேறும் போட்டதேயுண்டானல்
தாபேதனைஸ்வரியத் தன்னாலேகூடிவரும்

ஏற்போர்களாரேனு மெவ்வேளைவந்தாலும்
கூப்பாகத்தம்மாலே கூடுமட்டுமீந்தாக்கால்

இருந்தாலிறந்தாலு மெந்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம் புகழதிகவாழ்வுண்டாம்

தர்மங்களாவதுதான் தர்மவான்செய்வதல்லால்
கர்மிகளுக்கெய்தாதெக் காலமுந்தான்செய்யானும்

எத்தர்மமானாலு மீகைக்கிணையில்லை
மற்றெலாம்பின்சென்று மனுநீதியிலுரைத்தார்

மாரிச்சிறப்பு.

பண்ணிலுறுதவங்கள் மாதானமற்றுளதும்
விண்ணின்றுபோனால் விழலாகும்வாரிமுதல்

வாரிவளமு மானிலத்திற்புற்பூடுஞ்
சீற்பெருந்தானதவந் தேவாலயபச்சிறப்பும்

மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர் காழ்வும்
மன்னுமுயர்வானமதில் மாரிவள்மாமன்றோ

இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகன வேள்விமுடித்தாலும்
இல்லறத்தின்வாழ்வுக் கிணையாவதொன்றுமில்லை

மூர்த்தியென்றமூவருக்கும் முன்னுளிறந்தவர்க்கும்
பார்த்திபற்குந்துறந்தார் பலமுயற்சியாளருக்கும்

இயல்பினுலிவ்வா ரிவர்க்குத்துணையெனவும்
நயமாகுமென்றுகுற ளானதிலேசொல்லினரே

மட்டில்லாவாழ்விருந்தென் மனைதனக்குமுக்கியமாம்
இட்டமுறுபெண்சாதி யென்பவளேமுக்கியமாம

சற்குணமுந்தெய்வபக்தி தாமசிந்தைகற்புடமை
இக்குணங்களுள்ளா ரிகுக்குமந்தவீட்டினிலே

வற்றாதுசெல்வமவள் வாயால்மாரிபெய்யென்று
உத்தாரஞ்சொன்னு லுலகமெலாமாரிபெய்யும்

தானுமனையாளுமொரு தர்மமதுசெய்யநன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுதர்மமலல

செல்வநிலையாமை.

நினைத்தபொருணீங்கி நினையாப்பொருளென்று
கனஞ்சேரிருணிலவாய்க் காட்டுதற்கப்பாலும

இரவும்பகலாகும் பகலுமிரவாகும
பெரிதானமேடங்கே பேராறுயாகிவிடும்

ஆறதுவுமேடாகு மணல்நிலத்திலோடம்வரும
வாரிசுவறியதில் மணலுமிகச்சூடாகும்

வேண்டுநிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியோரு மேலோருமாயார்கள்

தகமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருங்வ காழ்வதுவும்வாழ்வதுவும்

தெய்வச்செயல்.

பேராசையாலே பிரையாசைபட்டாலும்
வாராதுவாராது வருவதுவும்போகாது

எங்கெங்கேபோனாலு மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப் பலரைமிகநொந்தாலும்

அழுதுதொழுதாலும் அநேகநாள்தெய்வத்தைப்
பழுதாயுரைத்தாலும் பயனேதுமெய்தாதே

ஆழக்கடலி லமுக்குழுகந்தாலும்
நாழிவரும்நாழியிலே நானாழிநீர்வருமோ

பூக்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றி யாசையினலவாராதே

ஆலிற்புறாவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சிலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க

பாயவந்தராஜாளிப் பட்சியதுமேலுலவக்
தூயபுறாவின்மேற் றொடுத்தகணைவிலகி

ராசாளிப்பட்சியுட லானதிலேதைத்துவிழ
பாசமுறும்வேடன் பதத்தில்விஷந்தீண்ட

வேடனும்ராஜாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
சோடாய்ப்புறாவிரண்டுந் துன்பமற்றுவாழ்ந்ததுவே

இத்தகைமையாய்முடியு மீசன்செயலாலதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முந்நாலோர்

அண்டமுதுண்ண வரனுமேநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுறைந்து கோதைதனைப்பிரிந்தான்

வேதன்சிரமிழந்து மிப்பார்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனு மங்கமெலாங்கண்ணானான்

சக்கிரேசனைவரிச் சந்திரனும்பெண்டிரும்
மிக்கதொருநாடிழந்து விலைப்பட்டுத்துன்பமுற்றார்

மன்னுநளராசன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுகுன்றினனே

ஐவரடவியுற்றா ராகையாலாரேனும்
வெய்யோன்விதிதனையே வெல்லவெவரால்முடியும்

பூபாரந்தீர்த்த புயல்வண்ணன்வேடன்கை
ஆபரணம்பட்டிழந்து வாதைக்குள்ளாகினனும்

ஆனைபறவையுட னாடரவமிம்மூன்றும்
சேனைமனிதர்கையிற் சிக்கிமெலிவதுவும்

நல்லகதிர்மதிகள் ராகுகேநாற்றுயருறலும்
வல்லதர்மவானுக்கு வறுமைவந்துசூழ்வதும்

பாக்கியமுள்ளானுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப் புத்திரருண்டாவதுவும

நல்லோர்க்குப்பொல்லாத லண்டப்பெண்டாவதுவும்
பொல்லாதகுநல்லகுணப் பெண்மனைவியாவதுவும்

ஒரொன்பதொன்பதிது ஊழிவிதிப்பயனும்
வீரர்க்குமேலவர்க்கு மின்பதுன்பஞ்சமனும்

ஆகாச்செயலுக்கு மயலார்பொருள்தனக்கும்
வாகாகவாசைமிக வைத்தால்வருவதில்லை

வாழ்வதுவுந்தாழ்வதுவு மன்றுவருமின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ

ஏலவேவந்திதுபோ மின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னு மிவைரண்டுமனுபவிப்பார்

காலித்திரளிலொரு கன்றுனதைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசுவறிந்துசேருதல்போல்

ஓடியொளித்தாலுமங் குற்றபழவினைதான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள்

எக்காலஞ்சென்றாலு மிறவாதபேரில்லை
மிகவிதிவசத்தை வெல்பவர்களாருமில்லை

சுகபோசனம்.

தாளாண்மையென்னுந் தகைமைதனைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேயதிக மில்லையென்றுசொல்லினரே

வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள் தன்னருகில்சஞ்சரிப்போர்

மருவாருஞ்சந்தன மாம்வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்க ளாவின்பாலுள்ளவர்கள்

சகடுடையாக்கீரை தன்னைபயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்மருக்கு மேலானபஞ்சமில்லை

நற்சகோதரர் துற்சகோதரர்.

தம்பியர்மேலன்புடையோன் தர்மரகுராமர்
தம்பிமேல்சத்ராதி தசக்ரீவன்வாலியுமாம்

நற்றுணையாந்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றதொருதர்மருடன்பிறந்தநால்வர்களாம்

சுக்ரீபனுனவனுஞ் சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில் தமையனுக்கச்சராதி
பண்பாயுடன்பிறப்பிற் பகையுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல முறையிலுரைத்தனரோ

அரசரிற் புகழ்பெற்றோர்.

மனுவிட்சுவாகுவுடன் வாகானஅம்பரீஷன்
கனைதைபெறுமாந்தாதா கார்த்திகார்ச்சுனன்பரதன்

விருத்தச்சிபியுடனே விந்துச்சிவிந்துவுடன்
மருத்தப்பகீரதனும் வாணன்முசுகுந்தனுடன்

தீராப்புகழ்யாதி தேவேந்திரனுடனே
பாசற்றதசரதனும் பாண்டவர்களைவர்களும்

சத்யவரிச்சந்த்ரனுட தாதைதிரிச்சங்கு
உற்றநளன்விதுர னேகோபுரூரவனும்

ஆங்காளிலேபிரக லாதனுடன்மாவெலியு
மன்னுஞ்சடாயுகுகன் வாகாம்விபீஷணனும்

ஆறைந்துபேரு மதிகபூசாபலராய்ப்
பாரிற்புகழ்நிறுத்திப் பரமபதமுற்றவராம்

ஏற்கைபெருந்திரனி லெழில்விஸ்வாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்க வாசகருமாவெலியும்

விண்ணையில்லாவள்ளுவரும் வேடனெனுங்கண்ணப்பன்
தன்னுலெழுவர்களுந் தானவராய்ப்பேறுபெற்றார்

நல்லறிவு.

தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்ட வடுவொன்றுமாறாதே

ஏற்கையுடன்புகழோ டெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறு ஜென்மமெடுக்காமைநன்றாம்

மண்ணிற்பிறப்பதெல்லா மாறிலதுவேகாட்டுந்
தண்ணமுளவாய்ச்சொல்லாற் சாதியறிந்திடலாம்

சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாத
பெரியோர்தமையடுத்தாற் பேதமொன்றும்வாராதே

ஆய்யகிரகம்நித்திய சோபனத்தினால்விளங்கும்
வையகத்துராசாக்கள் மனுநீதியார்கெலிப்பார்

நாரியர்கள்சற்குணத்தி னாலேவிளங்குவர்கள்
கூறும்விதரணனுங் கொடையால்விளங்குவனும்

பாரிலெங்கணும் பகல்விளங்குமா விரவிற்
கதிரொளியும் விளங்குங் காந்தியுமா மதியாம்

பதிவிளங்கும் பொன்னாலே பார்விளங்கு மேகமதால்
சதுராய்ப் பகைவிளங்குந் தங்கள் புயவலியால்

குடியே விளங்குவது கொற்றவர்களால் நீதி
முடியதலம் விளங்கு நெஞ்சிலுற்ற நல்லறிவால்

புகழாற் கொடைவிளங்கும் போசனத்தா லுயிர்வழங்கும்
புகழரிய நன்னூலாற் புத்திமிகவே விளங்கும்

சொந்தமென்று துற்சனரைத் தோழமைகள் செய்யவொண்ணாச்
சந்தேகமுற்றதொரு தையலரைச் சேரவொண்ணா

சார்பில்லார்க்கில்லைநிலை தயவில்லார்க் கறமுமில்லை
ஊரிலலார்க்காசுமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை

மாடில்லாதார்க்கிந்த வையகத்தில் வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றலிலாபமில்லை

துர்சனர்க்கு நேசமில்லை சுகமில்லார்க் காசையில்லை
இச்சகத்தி னன்மைதனக் கெப்போதழிவுமில்லை

மனதின் குறிப்பை வதனத்தாலறிந்திடலாம்
அனைவோர் குணநடத்தை யதனாலறிந்திடலாம்

சமர்முகத்திற் சூரன்வலு தன்னையறிந்திடலாம்
தமர்சேரும் வல்பிணியைத் தாதாலறிந்திடலாம்

கல்விப்பிரசங்கத்திற் காணலாங் கவிஞர்திறம்
சொல்வண்மையாற் சாதி தோற்றமறிந்திடலாம்

மாநிலத்தில் பூண்டுகளை மழையாலறிந்திடலாம்
தானுநல்லார் பொல்லாரைச் சந்ததியாற் கண்டிடலாம்

கண்ணிரண்டாம் யாவருக்குங் கற்றோர்க்கு மூன்று கண்ணாம்
எண்ணுந்தியாகிகளுக் கேழுகண்ணாமல்லோ

மனங்குவிந்த ஞான மகிமையறிந்தவர்க்கு
அனேகங் கண்ணாமென் றருளினார் முன்னோர்கள்

தர்மவான் றன்னிடத்திற் றங்காது பாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கரிடஞ் சனத்த தர்மமில்லாது

நெருப்புக்குமுன் குளிரு நில்லாதுதான் மிகுந்த
கருத்தவிருள் மணியுங் கதிரோன்முனில்லாது

சத்தியத்தை நாளு மசத்தியமும் வெல்லாது
புத்திகெட்ட கோபம் பொறுமைதனை வெல்லாது

புண்ணியத்தைப்பாவமொரு போதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கெருட மந்திரமுன்னிலலாது

சந்தனங்கஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசேரியாபரண மிவற்றையெவரீந்தாலும்

ஏற்போரொருகையா லேற்றாரேயாமாகில்
கூர்ப்பாய்கொடுப்பவர்க்குக் குறையாயுவாயிசுண்டாம்

செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
மகவானதெய்வமது மந்திராதீனமதாம்

மந்திரமாமதுவே மாமறையோராதீனம்
சந்ததஞ்சேர்மறையோர் சகலருக்குந்தெய்வமென்பார்

பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழெனினும்
மேல்சுத்தமாய்கால மிகவறிந்துண்ணனன்று

நல்லோர்க்குற்றதுயர் நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொரு போதுநிற்கமாட்டாதே

பாம்புகடுநெருப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மனுநூலோர்

ஊமைக்குத்தோன்ற உபாயங்கள்சொல்லுவதும்
காமிக்குஞானக் கதையெடுத்துச்சாற்றுவதும்

துட்டனுக்கெத்தனையோ சொல்லிநன்மைசெய்ததுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைச்சொல்லுவதும

இன்பக்கவிகடினை யியாற்மேற்பாகவதும்
அன்பில்லாசோரஸ்திரீ யாசையால்மெலிவதுவும்

நலத்தைக்கொடுப்பதில்லை நன்றாகாதிவ்வாறும
மலைககல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ

ஐந்தாணபாவத்தி லானலிரண்டுகலம்
ஐந்திலேமூன்றை யவ்வைசொன்னாளாகாதாம்

தெய்வத்தாலாகா தெனினுமுயர்ச்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர்

இத்தனைநாள்நம்வீட்டி லேற்றும்விளக்கென்றதூங்கி
முத்தமிட்டார்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடும

உற்றகுலத்தெய்வநமக் கொன்றுசெய்யாதென்றுபொய்யாச்
சத்தியமும்பண்ணினாற் றான்விடவுமாட்டாது

தூங்குவதுபோலும் தூங்கிவிழக்கின்ற
பாகதவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு

கூட்டினுள்ளேயிருந்து குருவிப்பறப்பதுபோல்
தேட்டமுடம்பினிலே சீவனிருந்தேதுசெயல்

கொல்லாமை.

கொலையென்றுநெஞ்சிற் குறியாதான்வாணாள்மேல்
மலைவாயுயிருண்ணு மரலிவரமாட்டானே

நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவரெனில்
கொல்லாமையென்பதனைக் குறித்தறிந்தவுத்தமராம்

தாணுதிபதிநாதன் தந்தையாய்சற்குருவு
மாணுர்யனையாட்டி மறைவோர்புராணிகரை

சுத்தமுள்ளவீரர் துலகுகவிவாணர்
உற்றதபோதனர்களுயர்குலத்தோர்பால்யர்கள்

சாலவிகடப்யிர சங்கிபிணியாளர்
ஞாலமிசைவறுமை யாளர்பதினெண்மறையும்

எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சர்ப்பனையுந்தெண்டனையுந் தான்செய்யலாகாதே

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போர்
ஆதிகுருவான வாரையவருடையசிஷரையும்

சோதிடஞ்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
யோகரியபணடிதரிவ் வோரெழுவர்தங்களையும்

தீதானவஞ்சகங்கள் செய்தாரேயாமாகில்
தீதாய்க்கொடுநரகிற் சேர்வாகள்திண்ணமிதே

அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடக்கி வைத்தலமைச்சர்களும்

நன்றிமறந்தவரும் ராசர்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும்

மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வேதாந்திமாதவத்தோர் மெய்நோகவைதவரும்

தெய்வமிகழ்ந்தவரும் சின்னமுதலாகப்
பொய்சொல்வோரன்னியர்தம் பொருட்காசைபட்டவரும்

பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
நேருண்டவீட்டுக் கிரண்டகங்கள்செய்தவரும்

பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
நன்னயமில்லாத நரகிற்குடியிருப்பார்

சோதிடங்கள்சொல்வோருந் தொடுவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாபண்டிதரும் பிராயச்சித்தம்விதிப்போர்

நீதியுரையாமலிரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழாம் பாழ்நரகமெய்திடுவார்

பார்க்குமலைமடவின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் பாதகனுமென்பவனும்

கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
ருற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம்

அக்கினியிலேயுமிழ்ந்தோ ராறுபேராமிவர்க்கு
மிக்கவொருகொடிய வியாதிவரும்பின்னரகம்

தண்ணீரிறம்பணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தே ருறுமலமும்நீர்விடுத்தோர்

அசுத்தமுடனேதா னாலயத்திற்சொல்வோர்கள்
நிசமாகச்சந்நிதியி னேராய்க்குடியிருப்போர்

போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்த
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச் சூடினவர்

தீராப்பிணியிடைந்து செகத்திலிம்மூவர்களும்
மாறுவறுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள்

மேற்குலத்துகீழ்குலத்து மின்னாருடன்பிறந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவர்குலவிர்த்தியற்று

கண்காதுக்கெய்யாத கடுஞ்சொல்லைசொன்னவர்கள்
மணமேல்குலத்தோடு வன்னரகஞ்சேர்வார்கள்

கெடுமதியாலெடுத்தவர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமுமேநாசமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள்

மன்னுநிருப மதுதனையேதள்ளிவிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடிப்போர்

எளியர்தனையடைந்தோர் கியல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளக்கோளர் பழிபுனையரெண்மரையும்

மண்டலத்தில்மூன்றுபிறை மட்டும்பொருக்கப்பாற்
தெண்டனைகள்செய்வதுமே தேசமன்னர்நீதியதாம்

உரியவிவகாரம்வந்தா லுற்றார்பகைஞரெனும்
பரிதானமெய்துசம் பந்தரிவரேழையென்றும்

பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து
கூறாய்ச்சமன்செய்த கோல்போலிருக்கலையும்

நிறையாரிறைத்தவர்க்கு நீடூழிகாலம்வரை
குறையாமல்வாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம்

துஷ்டசங்கிரகம்.

சாதிமுறைதவருஞ் சண்டாளர்கற்புடைய
மாதைவிரும்புவிசு வாசமில்லாபாதகர்கள்

கோள்கள்மிகுத்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும்பகையாளர் நாசனத்துரோகிகளை

ஏழைதமையடித்தோ ரிகல்விளையுஞ்சண்டைகளைத்
சூழும்பிணிகளொடு துஷ்டமிருகந்தீய

கொண்டமைதீராத கோபம்பதினாறு
மன்றடக்குவதல்லா லதிகரித்தால்வெல்லரிதே

துற்சனரும்பொன்னுந் துரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாமுககருவி

மானமில்லாமுளிக்கு மானாரவர்களையும்
ஈனமில்லாக்கரும்பு எள்ளுடனேயீரைந்தும்

தெண்டித்தார்க்கெல்லாஞ் செயங்கொடுக்குமின்றிவற்றை
பண்டிவேடநூலிற் பகர்ந்தாரேமுன்னோர்கள்

தந்தைதாயானாலும் தன்குலமெல்லாம்விளங்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும்

மந்திரியேயானாலு மரபுள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியென்றறிந்தால்

அன்றேயகத்திடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனரே. உருரு

தோழமையில்வஞ்சகரைச்சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை

தன்னகர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வறுவார்
மன்னைகொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம்

நல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணமலோபிதெய்வம்

தாரித்திரனிக்கு தனங்கொடுப்பார்தெய்வமிந்தத்
தாரணியில்துட்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார்

நீதியுடையோனுக்கு நேயரேதெய்வமதாம்
ஆதிபராபரமே யனைவோர்க்குந்தெய்வமதாம்

அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னொன்றுமின்னொன்று பேசித்திரியவொண்ணா

வஞ்சகரைநம்பவொண்ணா வாக்கிரண்டுபேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையிலாச் சண்டையினிற்போகவொண்ணா

வேணவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச மாடம்பரவேணும்

நீடுநதிகண்மிக நீந்திபறிந்தாலும்
ஓடந்தனையகற்றி யுதகத்திற்சொல்லவொண்ணா

ஞானமறிந்தாலு நாடொப்பனைகளது
வானதுபோலேநடந்து மகிமைபெறவேவேணுஞ்

செம்பொற்குபேரனெனிலுஞ் சீவனத்திலேமுயற்சி
பண்புடனேநாளும் பண்ணியிருக்கவொண்ணா

வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயிடினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறலேணுமல்லோ

உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கின்று

பெற்றபிள்ளைநான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம்

மெலிவாகியேபதிஷ்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே

கிராதமோகமதால் தேகமெலிவுற்றாலும்
வீராயவிழ்தத்தை விட்டுவிடலாகாதே

தனியேபொருள்தேடித் தனித்துண்ணும்பாற்சோற்றி
லனையார்கிளையோடே யன்றுண்டகூழதிகம்

ஏதோர்மருங்கு மில்லாரிடத்தினிலே
பேதைகளாச்சேவித்து பெரும்பொருள்கள்வாங்குவதில்

மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபோகொடுக்குந் தாம்பூலமேயதிகம்

வீணிற்பலவித்தை மெத்தவிரும்புதலி
லாணியாம்வித்தைகளறக்கற்றாலொன்றுநலம்

சின்னமுயல்யான்கள் சிற்சிலதைவெல்லுவதி
னுன்னும்புலிக்குட்டி யொன்றைவென்றார்கீர்த்தியுண்டாம்

அவிவேகியுடன்வெகுவா யானவுறவகிலும்
விவேகிபகையிருந்தால் மெத்தவதுநன்றாகும்

தன்னுயிர்க்குவந்தலயந் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிவிடவேண்டுதற்கும்

மையல்கொண்டமாதருக்கும் வையகத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தபாவமொரு போதுமில்லையென்றனரே

பின்னல்வெகுபொருளைப் பெறுயளிப்பதிலும்
முன்னால்கருணத்தில் வியர்ந்தவரைக்காக்கநன்றாம்

காலையென்றும்பின்னையென்றும் நாட்கெடுவுசொல்லுவதில்
வேளையிதுவல்லபோவென்றால்மிகவுநன்று

தெளிவானகல்விகற்றால் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம். ௨௮

இந்தமதிற்பத்தியே தெய்வவசியமதாம்
இற்றப்பெருஞ்செல்வ முறவோர்தலைவசியும்

வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதாம்
மாண்டுகெட்டிக்காத்திருந்தா லரசர்வசியமுண்டாம்

சாந்தமொழுக்கஞ் சகலஜனவசியம்
வார்த்தகமுநல்ல மனையாளுக்கேவசியம்

கூடியேவாழ்ந்தாலும் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும்

தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தவர்க்குசொன்னாலும்
மானமுளநல்லோர்க்கு வணங்கிநடந்தாலும்

செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவற்கு
ஐயமில்லைவாழ்வதிக மப்பாலுங்கற்பமதாம்

செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவற்கு
துய்யவயித்தியங்கள் சோதிடங்கள்தங்களிடம்

மருக்காயெவையுமங்கே வைத்துவணங்காதென்றும்
வெறுங்கையாற்போனால் விழலாங்கருமமெல்லாம்

பாரிலொருதாயார் பலபிள்ளைபெற்றாலும்
சீருமழகுந் திறங்குணமுமெவ்வேறாம்

பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
தயிரியமுள்ளவர்க்குத் தர்ஜோர்பயமுமில்லை ௨௯

உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பாவமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை

தன்னைவருயிருந்து தப்பிதங்கள்செய்தாக்கால்
அன்னியனுமென்றெண்ணி யன்றேயகற்றகலப்

அன்னியனாயிருந் தன்புள்ளோனுனக்கால்
தன்னவனுமென்றவனைத் தாபரித்துக்கொள்ளலாம்

நல்லோர்க்குமுன்னுள்ளோர் நன்மைசெய்தாலதற்குப்
பொல்லாவொருநூறு பிழையும்பொறுப்பார்கள்

அற்பர்க்கெழுநூறதிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தாற்பொறுக்காராம்

செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம்

கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்
நற்றவங்கணுற்றவர்க்கும் ராசாக்களானவர்க்கும்

சாதிவரம்பெண்ணு தனுசரிக்கவேண்டுமென்றே
நீதிமுறையென்றுமநுநீதிநூலோதிடுமாம்

இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
நன்பில்லைசற்று மதற்குப்பழுதுசொல்வார்

கற்றோருருமைதனைக் கற்றோரறிவதல்லாற்
சுத்தமலடிபிர சூதிதுயரறிவாளோ ந.ரி

பஞ்சரித்துவேண பரிசுபெறுவதினு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணனன்றாகும்

வீம்பானசத்ராதி மெய்யன்றிருப்பதிலும்
பாம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றெனலாம்

ஒன்றென்றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
எண்ணெனப்பதேனை யெழுத்தெனபதுவேகண்

கைப்பொருளேபொய்ப்பொருளாங் காலவரைநில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்கப்பொருளாம்

வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே

யானைதனைத்தன் றடாதுசெய்யப்போகாது
சேனைதமிகுந்து தின்றாலுங்கேடெய்தும்

ராசருறியரென்று நடத்தைபொறுமைசெய்தால்
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே

இல்லாரையுள்ளவர்க ளேசியிழுக்குரைத்தால்
நல்லதல்லநஷ்டநயம் ராட்டினமபோற்சுற்றிவரும்

தேசமதிலேல்லைபர தேசிமறைவேதியரை
நாசகாவாவிட்டா னன்றல்லபாவமுமாம்

சாகாவரம்பெற் றவர்க்குப்பயமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை ௱௧௰

வித்தைகற்றால்தந்தையால் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும்

மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாவிட்டால் விரையில்லாபூவாகும்

இருந்துமயிர்நகமுந் தேசமன்னர்பல்நான்கும்
இந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை

மின்னாரில்தாசி வேதியர்காய்கோழியுடன்
தன்மைசேர்பண்டிதர்கள் சாதியொத்தவாழார்கள்

ஓங்குபொருட்சேத மூயிர்சேதம்வந்தணுகில்
சாங்கமுடன்சிறித்தாற் றயிரியம்வந்தெய்திடுமாம்

தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருடனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லாளுமோர்துரும்பு

வீரமிகுசூரனுக்கு மேவலர்சேனை துரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர்துரும்பு

பெரியோருக்கற்பர்கைப் பிரயோசனம்துரும்பு
அரியகலைவாணியருளடைந்தோர்க்கவிதுரும்பு

நூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்தாலொருவன பாவாணனென்பவனும்

பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்தொருவன்
நீங்காதகொடையாளி லட்சத்திலேயொருவன் ௱௨௰

சினமென்பதென்பதொரு சிக்காவதையருத்தால்
மனமென்பதென்பதுற்ற வாரேமுடிந்திடலாம்

அறிதானமாகங்க ளனேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவிழலாக

எத்தர்ம்மமானாலு மெண்ணித்துணிதனன்று
மிக்கதுணிந்தபின்னர் மேலெண்ணினுவிழுக்காம்

பட்சிக்கரசுபலம் பாலருக்கழுதைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குதேர்பலமாம்

வாகனங்கள்தானுடையான் வழிநடைக்கஞ்சானும்
வாகுடனேபாலுடையான் வந்தவிருந்துக்கஞ்சான்

வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உம்மபணக்காரனென்றுக்குமஞ்சானும்

மானிற்கவரி மயிர் தடுத்தாலேகாது
மானபரனவ்வாருய் வசையனுவுங்கேளானும்

மேஷந்தனக்கு மிரண்டுசெவியுமறுத்து
மாசுபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து

சூடுசூட்டியும்பின்னே தொடர்ந்துவரும்வாறதுபோல்
கேடுகெட்டமாண்பர் கீர்த்திகளுக்கஞ்சாரே

மச்சுவீடால்நிழல் மாணுர்தனக்கோடு
நிச்சயமாய்க்கனற்று நீசர்மிவைநான்கும்

கட்டாகச்சீதள காலத்திலுஷ்ணமதாய்
திட்டமுடனுஷ்ணத்திற் சீதளமுமாகுமல்லோ

சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்கால மறிந்துசெபஞ்செய்பவர்க்கு

ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமனுநூலி னிகழ்த்தினர்முன்னோர்கள்

பொன்னைதரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வன்னமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும்

பெரியோரைச்சார்ந்தவர்க்கு பெருமைமிகவுண்டாகுஞ்
சிறிதானதுற்சனரை சேர்ந்தவர்க்குகேடுவரும்

விண்ணதனிலேயிருந்து வீழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடுமிரும்பில் வந்துவிழும்ன்சுவரும்

தாமரையில்வீழ்ந்தாற் றுழாதுயராது
சேமத்திருகடலின் சிப்பிலேவீழ்ந்தாக்கால்

விலைமதிக்கவொண்ணுத வெண்முத்தையீனும்
தலைமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து

கொடுப்பதேதர்மமிந்தக் கூரறிந்துசெய்யாட்டால்
விடுப்பாய்கொடுப்பதெல்லாம் வீணுகுமென்றனரே

காரிருளிற்புற்றடியிற் கண்டயழுதைதனைச்
சீறுமுயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல்

உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்லார்கள்

வீணுகப்போகா விடந்தனிலேபோகவொண்ணு
தோணுமற்போனுக்காற் றுன்பம்வரும்பின்னிழுக்காம்

தேசிவந்தாற்பசுவைத் தேடாரதிமோகத்
தாசிவந்தார்றனது தாரமதைத்தேடார்கள்

ஆசையாலெப்போருளும் அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோசமில்லைகேடுகெட்ட லுத்தரிலும்லுத்தர்களாம்

அன்னைபிதாமூத்தோ னாசானரசருடன்
பின்னைப்பெரியோர்கள் பிராணசினேகிதர்கள்

ஆகவெழுவர்களு மழையாதிருந்தாலும்
போகலாமேவலியப் பிழையொன்றுமீனமில்லை

மலைகானஞ்செல்லநன் றல்லாதுதான்தரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டநன்று

ஓடெடுத்துவாங்கியே யுண்ணநன் றியாவர்களும்
நாடாவனத்தினிற்போய் நாடுவதும்நன்றாகும்

ஈயாதலோபியிட மேறும்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்றாரேமூதநூலோர்

வெள்ளாட்டியானவளை விரகத்தினாலணைந்தால்
உள்ளகுலமும்போ பொழுக்கமெல்லாங்கெட்டுவிடும்

வேசையரைச்சேர்ந்தாக்கால் வெட்கமில்லைபொன்சேதம்
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால்

ஆயிசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தாயபிரந்தாரத்தைச் சோரத்திற்சேர்ந்தாக்கால்

வன்னரகஞ்சேர்வரிசை யாகாதுநாலுமென்று
முன்னோர்வடநூலில் முறையாயுரைத்தனரே

செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாகோபமொரு போதும்வைக்கலாகாதே

இன்னவகையினானா லெய்துமெய்தாதெனவே
தன்னிலறிந்துசெய்யா தாராகினஷ்டம்வரும்

கள்ளுண்டாலுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளையரும்பிற் கொலைகள்வந்துநேரிடுமே

சூதாடியின்மையிலே துன்பம்வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம்

ஆகாயவீதிக்கு ஆதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்றோர் மாசபைக்குரத்தினமாம்

சயனங்களுக்குரத்னஞ் சார்ந்தவழகுள்ளபெண்கள்
குலமானவீடதற்கு ரத்தினஞ்சற்புத்திரராம்

மானமென்றாய பேற்பவரேயானாலும்
மேன்மைசெறிபெரியோர் வெம்பகையொன்றாகாது

ஆருச்குந்திருமா தனுக்கிரகமுள்ளளவும்
பேருக்குள்ளெந்தப் பகையுநெருங்காது

கூடாதகாலங் குறுகிவருங்காலம்
வீடாணதிலிருந்தும் வினைவிளையுந்தன்னாலே

தாரித்திரர்பசி தாங்குவதேமிக்ககொடை
ஏற்றபணக்காரர்க் கீவதுவேவட்டியுமாம்

எளியோருடனெதிர்த்தே யெண்ணாமல்லவதிலும்
விழிகாணாதோமென்று விட்டுவதேநன்றாகும்

அன்பில்லாதாரிடத்தி லதிகவுறவதிலும்
பின்புமவருடைய பெருத்தபகைநலமாம்

வேண்டாப்பெண்டுரை வீணாய்வைத்தேசுவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிட லுத்தமமாம்

சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவாரும்
சாலவறுமையுற்றோர் சாவதர்க்கஞ்சுவாரும்

பாரிலேயீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறென்னில்
பூருவபட்சப் பிறைபோல்வளர்ந்திடுமாம்

ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயிடினுஞ்
சாயுமமரபக்ஷ சந்திரன்போற்றேய்ந்திடுமாம்

என்னவறுமையுற்றினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னாகுமென்றுசொல்லிடலாம் ௯௭

பாரித்தசெல்வர்கள்தான் பலர்க்குதவியில்லாவிட்டால்
தரித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம்
கையானதுநமது கண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தரிக்கின்ற காரணமுண்டோவதுபோல்
இளையோர்தமையடங்கோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேண்டுவதே பெரியோர்முறைமையதாம்
அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனேநம்முடைய மரணவரைநில்லாது
நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்புவைத்தா லாவின்பாலமட்டுமுண்ணும்
தண்ணீரைத்தள்ளுந் தகைமைபோலேயுலகம்
விண்ணாணமாயுரைத்தா லிந்நூலைப்பாராமல்
எண்ணியேநுண்ணியனா லென்பதனைக்கற்றக்கால்
மண்ணிற்சுகமும்வரும் மறுமையிலேசொற்கமுறும்

இட்டமுறுமோக்ஸ்திரீ யேதிகழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ் சினம்வரவேமாட்டாது

இன்பம்பொருளுமிக வெய்துவதானாலுமதிற்
றுன்பமவருமென்றறிந்தாற் சொற்பனத்தினேனுக்கவொண்ணு

பயனில்லாவார்த்தைசொல்லிப் பலநாளுங்கோளுரைத்தால்
தயவாயவர்செய்யுந் தர்மம்பலியாது. ௬௮

ஊரார்பகைதுன்பமோர்யாமகாவறுமை
மாறுதெனவுமுன்னாள் வள்ளுவனார்சொன்னாரே

வாழ்வுள்ளோரானாலு மகாஞானியானாலும்
தாழ்வுள்ளோரானாலுந் தயிரியவானானாலும்

நாடொப்பனநெகிழ வாகாதொருநாளு
மூடத்தனமாக முன்பின்னாய்ச்செய்பவரும்

அரூபியுமான அலகையோடொக்குமென்றும்
பிறகவரைச்செய்த பிணத்தோடேசேர்க்கவென்றார்

பொருளில்லாதார்க்கிந்தப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை

ஊன்தின்பவர்க்கு வொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலும் சாம்பரிலேவிட்டநெய்யாம்

வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
யார்க்குநல்லாமென்றுகள்ள வாசாரஞ்செய்வதுவும்

காமக்குரோதமுற்றுக கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்து வெண்ணீற்றைப்பூசிடுவார்

தாடிவளர்த்து தலைமொட்டைசெய்திடுவார்
பாடிப்படித்துப் பாதுகையின்மேல்திரிவார்

மகத்திவருமல்லவல்ல வாய்பிழைப்புக்குத்திரியும்
செகச்சாலக்காரரிவர் சித்தியொன்றுமில்லையென்பார். ௬௯

ஆவென்றபாவமொன்று மற்றார்பிறவியறும்
சீவன்முத்தனாகுமென்று செப்பினார்முந்நூலோர்

பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமை வெகுளாண்மையிந்நான்கும்

தவமிதுவாமென்றுந் தங்குமெய்ஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவனென்றுஞ் செப்பினார்வள்ளுவரும்

மன்னவரேயானாலும் மற்றெவர்களானாலு
மென்னவிதமாமோ ரிடர்வருமென்றேயறிந்தால்

கைத்தானமதனைக் காறுமற்போனாக்கால்
மகத்தானவாழ்வுகெடும் மாநிலத்திற்றுன்பமுண்டாம்

மாநிநிலையும் வல்பிணியுந்தீக்கோளும்
வேறுபகவர்கள்வர மேலுமேவற்பகையும்

வாராதுதற்கால வகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்து அவரைத்துணைக்கொள்வதாம்

ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார்

தலமீதில்மிக்கான சாத்திரங்கள்கற்றாலு
முலகவியற்கைதனை யொன்றும்விடலாகாது

இல்லாததாராளு மிரந்துமுலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும் சா

வலியாரெளியாரு மானவான்மேவரிட
மலிவாஞகோபங்கள் வைத்தாரேயாமாகில்

நாடாளாம்லட்சுமியும் ராசர்பகைநேருங்
கேடாமுடியுமென்று கிளர்த்திளவ்வையுந்தான்

எப்போதுங்கீர்த்தி சற்றுமில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினாற்பூமி விளைவுகுன்றிப்போய்விடுமாம்

குற்றமில்லாமற் கொடுத்துபுகழ்தேடாரை
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும்

காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்சற்குருவை நிகழ்த்துங்கொடுங்காலம்

பெரியோரைத் தூஷணித்துப் பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைநிந்தனையா யகம்பேசிமிக்காலம்

மெய்யேபொய்யாங்கால மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப் பொருந்துமிதுகாலம்

வஞ்சமரிலோடினவர் வரிசைபெறுங்காலம்
அஞ்சியேயாளடங்கி யரிவையர்மேலாங்காலம்

இன்பமுறு நூல்படித்தாலிகழ்ச்சியுருங்காலம்
பண்பில்லாளைபாண்டிப் பாட்டைமெய்க்குந்துற்காலம்

இனிதானசர்க்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்தற்காலம் சாய

பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம்

ஆணகலிகாலத் தடைவிதுவேயானலு
மானபரனானவனும் வையகத்திலுண்டெனலாம்

இருப்பார்க்கொருகடனு மெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம்

ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன் றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம்

தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க்குங்காலம்

சுகமாய்க்குடிப்பிறந்த சுதாகரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம்

கொண்டபெண்ணைவிட்டுக் கொடிதானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம்

சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்நியகளூர்சுற்று மவிசாரிக்காங்காலம்

மேற்குலமுங்கீழ்குலமும் விபசாரத்தில்மிஞ்சி
வாகுபெறுமவேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம்

பிள்ளைவயதில்மிகுத்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சிஷன்குருவைத்தேடான்

பெண்டானவள்ளியவள் பேச்சில்மிகுத்தாக்கால்
கொண்டகணவனையுங் குறியாகவெண்ணுளாம்

பாரோர்கணோய்தீர்ந்தாற் பண்டிதரைத்தேடார்கள்
சீரானசெல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள்.

தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும்

தெய்வநிகரான தேசிகனார்தேவி
யைவரையுந்தாயென் றருளினார்முந்நூலோர்

பெற்றபெண்போலவே பேணிமருமகளை
வைத்தாதரித்து வருமாமியேதாயாம்

தந்தைதனக்கிளைய தாரமந்தகைகேசி
யிந்தவருஞ்சித்ராங்கி பிள்ளைகட்குச்சத்ராதி

யின்தாரப்பிள்ளையென் று பேதகமில்லாமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம்.

பிதா,

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமயனுடன் மாமன்வளர்த்தவரும்

வித்தைவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும்

ஒன்பதுபேருமுற்றபிதாவென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

கல்விவருத்துக் கடனொன்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்த திறவானோர்தந்தையுமாம்

மைந்தர்.

அற்பராம்நூறுபிள்ளை யானாலும்பெற்றுமென்ன
சற்புத்ரனொன்றானாற் நலமுறையெல்லாம்விளங்கும்

தந்தைதாய்வாக்யந் தமயன்குருவாக்கியம்
சிந்தைதனிற்சத்தியமுந்தெய்வவிசுவாசமுடன்

இத்தகைமையாறுடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும்

எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வு போசனமூநஞ்சாகும்

தந்தைதாய்வாக்யமதூ தன்னைபரிபாலித்தோர்
நந்தாதசரதனும் ராஜகுமாரனென்பார்

பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரரில்மிக்க சுதன்பரசுராமனென்பார்

ஆசான்றன்வாக்ய மனுவுந்தவறுதான்
வாசாலஞ்சத்தியமுள்ள வாய்மையரிச்சந்திரனும்

தமையனுரைதட்டாத சற்புத்திரரானோர்
தமையுமங்கேசீர்தூக்கிற் றருமனுக்குநேரிளையோ

தந்தைபேர்தன்பேர் தாரணியிலேவிளங்கித்
தந்தைதாய்சொல்மறுக்காத் தன்மையுமேன்புத்தி

தந்தைக்கிசைந்தமறு தாரமேதன்றாய்ப்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார்

நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிந்திலுற்ற சுதராலறிந்திடலாம்

சோதிடம்.

உற்பவித்தநாளோர்பின் றென்பதுட றென்பதுவும்
வீட்டைப்போதும்வைக்கவொண்ணு வழிபோகலாகாது

வல்பிணியுந்தீராது மருந்துண்ணலாகாது
கல்யாணமெண்ணைமயிர்களைந்திடவுமாகாது

இல்லம்புகுத விரிதுண்ணலும்விதைக்க
நல்லறங்கள்செய்திடவு நற்பணிகள்நற்றாக

தாளுங்கரிக்கவிதுசார்ந்தநாளாகுமென்று
மேநாட்கணித விதியாலுரைத்தனரே

திங்கள்முதநாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியுமாவாசியிலும்

சென்மநாள்மூன்றிலுஞ்சேயிழையைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தன்குறையுநோயணுகும்

தலைக்கெண்ணைபோசனமுஞ் சவரமுடனித்திரையும்
தலத்தைக்கொடுக்குமந்த நற்கிழக்குதெற்கதுவும்

மற்றவிருதிசையு மாகாதுமத்தியமாம்
அர்த்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார்

இலட்சுமியிருப்பிடம்.

மாயவன்றன்மார்பினிலு பன்னரிடத்தினிலுந்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர்

தாமரையின்பூவினிலுஞ் சாகரத்திற்கங்கையிலும்
சேயமுறுமியானை தேசிமுகத்தினிலும்

ஊதுகின்றசங்கமுட னுத்திராட்சஞ்சாமரத்தில
கேதனத்திற் றரிணிலே கெட்டபோதன்னோர்பால்

சுத்தமுள்ளவீரரிடஞ் சுத்தமாகியமனையிற்
சத்தியுஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள்

அழகுசிகாமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும்

மரகதம்போல்சுத்த மானவிடந்தனிலும்
ஓகனகமாது குடியிருப்பாளென்னாளும்

மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற் சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற் பலவிளக்காப்பேரிடத்தில்

சூளைப்புகையிற் சுடுகாடெரிப்புகையில்
காளையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும்

கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடன்னிடத்திற்
கொள்ளிக்கரியுமியிற் கொட்டைநூற்பாரிடத்தில்

நீசர்நிழலில் நிட்டையிலாரிடத்திற்
பேசுங்கடுஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும்

சுத்தமில்லாமனையிற் சுராபானரிடமரவில்
வெற்றிபெறும்வேல் விரைவினிழலதனிலும்

என்றுஞ்சுசிகரங்க ளில்லார்விதவைகளை
மொன்றியணைவோர்பா லுதயந்துயில்வோர்பால்

மீதுணருந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத
மூதேவியாளுநித மோடிக்குடியிருப்பாள்

பாங்காகநாளும் பகற்புணர்ச்சிசெய்பவருந்
தாங்காதிடக்கையாற் றாம்பூலந்தின்பவரும்

போசனங்கள்செய்கின்ற போதிற்சிரசினிலே
தூசுபுனைந்துண்ட துன்மார்க்கரானவரும்

காலையிலுமாலையிலுங் கண்டுயில்வார்தன்னுடனே
நாலுபேரானவர்பா லட்சுமியுமில்லாளே

பகை.

பாரம்பெரியசத்தி பஞ்சுதனக்கேகாணுந்
சூரியனுஞ்சந்திரனுந் துட்டரவில்நால்மறையும்

சிற்றெறும்பர்ல்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளுமவந்தெய்தும்

தந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடுப்போரை
அந்தக்கொடியோரு மட்டமத்திலேசனியாம்

சபையிற்பிரசங்கந் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமிட்டுப்பேசில் மிச்சமர்ணமெதாருபெண்டிரும்

நாமாய்விரோதியுடன் றுனிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்த செவ்வாய்க்கிணையெனலாம

தன்னைமிஞ்சுமடிமை சந்திராஷ்டப்பங்குக்காய்
தன்னைச்சபையேற்றுந் தப்பிசென்மச்சூரியனும்

சகோதரற்குவஞ்சனைசெய் தமையனுமென்பவன்றான்
மகாபாவிமூன்று மிடத்துவியாழமதாய்

பார்த்திபர்கள்மெத்தவென்று பழுதுசொல்லக்கெடுப்போன்
ஏற்றமிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாம்

சாலக்கடன்பட்ட தந்தையருமார்க்கமனு
கூலமாயுட்பட்டுக் கொண்டுதிரிதாயாரும்

வித்தையில்லாப்பிள்ளையுடன் வேசையாய்ப்பெண்டாட்டி
சத்துருவர்நால்வரென்று சாற்றினார்முன்னூலோர்

வேங்கைபதுங்குவது வேழம்பின்வாங்குவதும்
பாங்காய்பகையுறவும் பாம்புசாய்ந்தாடுவது

நல்லோர்பெரியோர்க ணயந்துவணங்குவது
மெல்லவிடச்சிரிப்பும் விழிமகிழுமின்னொளியும்

மிக்கானவில்வளைவும் வேழமுறங்குவதும்
உக்கிரதளஞ்சமரி லொன்னலார்க்கொதுக்கும்

இத்தகையாமீரைந்து வெளிதாய்நினைக்கவொண்ணா
மத்தியமாமுயிர்க்கு வாதைகளுமுண்டாகும்

சொற்குற்றம்பாராட்டித் தொழுவழக்கைச்செய்பவர்போல்
பற்காட்டிச்சீவனங்கள் பண்ணித்திரிவதுதான்

வலிதானவாடரவின் வஞ்சப்படத்தினுள்ளே
எலிவாழ்ந்ததாரென் றியம்பினார்முன்னூலோர்

பண்பாய்க்கடுவுறவு பண்ணவந்தாநாகமிது
பின்பவரையும்பிரிந்தார் பிணக்காம்பகைநேரும்

அங்கபங்கமானாலு மசூசியங்களானாலும்
தங்ககுலத்தேகு தாழ்வுற்றிருந்தாலும்

நிந்தனைகள்சொல்லி நெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமு மிழுவில்லாதில்லையில்லை

துன்பம்பழுபகையுந் தொடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்தும் பெருமைசற்றுமில்லாது

பகை வெறுப்பு.

நேர்ந்தவினைவலியு நேர்வார்கடன்வலியும்
சேர்துணைவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுமாம்

கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தக்காலமடைக கொக்குபோல்வெற்றிக்கொள்வர்

நட்பவெறும்பெலாங்கூடி நோக்காமலேயேற
ஒப்பில்கருங்குழிந்த வுவனைபலவெல்லுதலாம்

மெள்ளமெள்ளப்பாய்ந்த நீர்முகக்கடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையறுத்தல். ௨௬௰

காலமதுவறிந்து காக்கைவெல்லுங் கூகைதனை
காலமதுதப்பினால் காக்கைதனைக்கூகைவெல்லும்

சிலநாளாயானையொரு தேங்காயினோடடக்கி
பலிதமுள்ளவேளைகண்டு பாகனையேவென்றதுவாம்

பண்பாகக்காலமது பார்த்துபகைசெலுத்தும்
பண்பிதுவாமென்று பகர்ந்தாரேமுன்னோர்கள்

உற்றபகைவரென்றா லுள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுமதை பேதமதைக்காட்டுவதாம்

காலத்தின்சீலன் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார்தப்பாது

சேரிடம்.

சந்தனவிருட்சமதைச் சார்ந்தமரமவ்வாசம்
ஆக்கமகமேரணைந்த வக்காகமன்னிறமாம்
பாலில்கலந்தநீர் படிமணிக்குள்வடமும்
சாலமரகதக்கற் சாய்கைபட்டதிம்மூன்றும்
தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
நண்ணயமாய்சேர்ந்தோர்க்கு நற்குணமேயுண்டாகும்
நல்லாரைக்காண்பதுவு நல்லார்சொற்கேட்பதுவும்
நல்லார்குணமுரைத்தா னன்மைகண்டாநற்றுளம்
ஆசாரமன்பு மறிவடக்கமுள்ளோரைத்
தேசத்திற்கண்டு சேர்ந்ததாற்பெருமைவரும்
கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாய்கை
மதியமதிலேகுறு வாறுசிறியோரிணக்கம்
மதியந்திரும்பினபின் வாதிக்குஞ்சாய்கையைப்போல்
சதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலேநன்மைவரும்
கற்றபெரியோருறவு கருப்புநுனியிலிருந்
தற்றதலவேர்வரைக்கு முண்டருசிபோலாகும்
சிறியோருடனுறவு தின்கரும்படியிலிருந்
துதியநுனிவரைக்கு முண்டருசிபோலாகும்

சொல்லாவிடம்.

கடலோடுங்கப்பலது கரையிலேயோடாது
புடவியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது

தண்ணீரில்முதலையவைத் தந்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றி நாடுற்றுற்கேடடையும்
செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமென்றிச்
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாதே

யோகம்.

மன்னர்மெச்சிக்கும் வரிசையதிகாரம்
மன்னுஞ்சாம்பிராச்சியமும் பட்டாபிஷேகமென்பார்
நல்லகுணமாகுமுன்னால் நாடிவலியவந்து
புல்கிடிலேயோகம் புத்தமிர்தசித்தமுமாம்
மண்ணிற்புதைத்தபொருள் வாதமுறைக்காசையுற்று
நண்ணுவார்க்கெய்தாமனண்ணார்கட்கெய்துவதும்
குஞ்சுப்பயிர்விதைத்து விளைவுகுன்றிப்போவதுவும்
கொஞ்சம்பயிரிடுவோர் கூடிவந்துவாழ்வதுவுங் ரூாய
கப்பல்வியாபாரங் கணக்குரைத்துப்போவதுவும்
சொற்பமாய்வாணிபஞ்செய் தோர்களுக்குகூடுவதும்
காணுமற்காணுமற் காவலர்கள்கேள்வியினால்
தோணுதலாய்தலியத் தொழிற்கொடுத்துவாழ்வதுவும்
மேனுளிற்றந்தைதாய் விட்டகுறையாகுமென்று
தானுமுன்னுள்செய்திருந்த தர்ம்மமாவதென்னும்
அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்நாட்பெரியோருக் கீய்துவரப்பபெற்றதென்றும்
லட்சுமிகடாட்சமிந்த நான்குவகையோர்க்குமென்று
உச்சிதமாய்முன்னே ருரைத்தாருலகோர்க்கு
திருமடந்தையேகில் சிறப்புங்களமுமுண்டு
பொருளுந்துறும்பாகும் பொல்லாருநல்லோராம்
செல்லாதவார்த்தைசெல்லுஞ் செய்யுமரியாதையுண்டாம்
எல்லாருமேபுகல்வா ரெதிராளியுமுறவாம்
கீழோருமேலோராய்க் கிளையுமிகவிர்த்தியுண்டாம்
வாழப்பெருங்காற்றுத தண்ணீர்போர்குடித்தும்

மனஊக்கம்.

வீரப்புலியுயிரை விட்டாலேதோல்கொடுக்கும்
சூரனுயிர்போமளவுந் தோர்வையென்றுபின்வாங்கான்
உத்தமியேயென்நாளு முயிர்க்குலயமில்லாமல்
சற்றுகிலும்பிறர்க்குத் தன்னியத்தைத்தான்கொடுக்காள்

ஏற்கைபோய்ச்சாலவுந்தா னென்னதுன்பமுற்றாலும்
ஊக்கமதுகைவிட்டா லுயிர்க்குலயம்வந்தெய்தும்

உள்ளஞ்சிதராம லொன்றினையேகைப்பிடித்தால்
தெள்ளிமருளுஞ் சித்திமுத்திரண்டுமெய்தும்

பல்லாம்வினைக்கவொரு பலனேதுமெய்தாது
அலைவாய்த்துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை

ஐம்புலனையுஞ்சிரியோ ரடக்குவதுவேயருமை
செம்பொன்னெல்லாந்தேடித் தினங்கொடுப்பதேயருமை

தெண்டிக்கவல்லவன் சினம்பொருப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்த கொம்பனையுமேயருமை

தேசமொன்றில்பேதைமன நிற்பதுமேயருமை
தேசத்திவ்வைவரையுந் தெய்வபிறப்பெனலாம்

அளவிலாமை.

பெருங்கடலாழம் புருஷயோகஞ்சூது
மங்கையர்கடன்மனமும் வஸ்துவின்றனிநிணமும்

வானளவு மாற்று மணலுமழைத்துளியும்
வானிலுறுகணமு மண்ணுண்டராசரையும்

உற்றபெரியோர்க ளுள்ளக்கருத்தளவுங்
கற்றோர்கருத்துங் காமன்கணையகலும். ௫௰

மானிடர்கள்சென்ம மனுத்தொகையுமாமனையு
மானபருவதங்க ளனைத்துந்திணிறையும்

பார்க்குள்ளேயிந்தப் பதினறுவல்லபத்தை
யார்க்குமளவிடவு மாகாதுகாவணமே

இறந்தார்பிறந்தார்க ளிவ்வளவாமென்றாலுந்
துறந்தார்பெருமைகளைத் துகையறிந்துசொல்லவொண்ணு

ஆயுள்நிதானங்க ளாறிரண்டிலேகிரகந்
தூயநிகரெனநிலை சொல்லயெவராலுமில்லை

சூரியன்முன்னிற்கலாஞ் சுடுமணலிற்நிற்கவொண்ணு
ஆறணியுமீசர்முன்னே யஞ்சாமற்பேசிடலும்

தேசமதில்முக்யச் சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார்

வாரியினீராழம் வானளவுமாமலையும்
ஆறின்கரைமணலு மாகாசத்தேயுதவும்

அன்பாமிவையைந்து வளவுகண்டுசொன்னலுங்
கொம்பனையார்நெஞ்சக் குறிப்பறியவொண்ணுதே

வெள்ளம்பறவைகளும் விலங்குடனேவேசையர்கள்
உள்ளநிலைநான்கு மொருவழியாய்நில்லாலே

உதவி.

வாவியிரம்பலத்தில் வைத்தமரநிழலுங்
காவுமணலூற்றுத் தண்ணீரின்பந்தலுடன்
பாங்கானசந்நிதியில் பழுத்தமரமானதுவுங்
தாங்கும்விபசாரி தனமும்நிலவிளெனி
பார்க்குவிவேகியர்கள் பாக்கியமிவ்வொன்பதும்
ஆர்க்குமுபகார மல்லாதுவீணலவே
நல்லோர்தேடும்பொருள்கள் நாவலர்க்கும்வேதியற்கும்
வல்லகுருவானவர்க்கும் மாதாபிதாவினற்கும்
புத்திரர்கடன்கிடைக்கும் போற்றுமித்தேவதைக்கும்
உற்றசகோதரர்க்கு முண்டென்றநம்பினர்க்கும்
தர்மமேசெய்பவாக்குஞ் சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரம்பேர்க்கு மெய்துமிவர்பொருளே
இல்லந்தனக்குத்தன் னேந்திழையாளே துணையாம்
நல்லதேகந்தனக்கு நற்றுணைவரே துணையாம்
தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்தில் வருந்துணை தான்செய்ததர்மம்
வர்த்தகர்பால்வைத்தபொருள் மன்னர்கடன்பழக்கம்
உற்றவிவேகிக் குபகாரஞ்செய்ததுவும்
பருவத்தில்பெற்றபிள்ளை பக்குவத்திற்கற்றவித்தை
தருணத்திலீரைகதும் தானுதவுந்தப்பாதே
என்னபகையாளுனு மிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னைக்கவிசொலினு மேன்மைசெய்வரேபெரியோர் ௩௩0

உதவாமை.

நாய்ப்பால்சொரிந்துமென்ன நாணல்மிகப்பூர்த்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகைவிலாயுதமேன்

எட்டிப்பழுத்துமென்ன யீண்டுதழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்திற் சண்ணயிருந்துமென்ன

நற்குணமில்லாப்பெண் தங்கநிறமாகியென்ன
பித்தசபைக்கோழை பிடிகல்விகற்றுமென்ன

ஆட்டின்கழுத்திலதரதுவுநீண்டென்ன
காட்டினிலவெரித்தென்ன கானவிநீர்கண்டுமென்ன

வேசைக்குப்பொன்கொடுத்தேன் விணருக்குநன்றிசெய்தேன்
மாசுடையவற்பருக்கு வந்தென்னதிகாரம்

காட்டுக்கரடிமயிர் கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்ன நெடுகக்குறையிலென்ன

இத்தனையாய்ச்சொன்னவிகுதெண்ணிரண்டுமீயாத
லுத்தர்கள்தம்வாழ்வுக்கு வொத்திருக்குந்தப்பாதே

தேகியென்போர்க்கீயாத தேடாதமக்குபொருள்
ஆகிவந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன

பேடியழகுகண்டு பெண்கள்மகிழுவதும்
நீடுவஞ்சர்சொல்லை நிசமென்றிருப்பதுவும்

கானல்கண்டேயோடுங் கலைமானுஞ்சாலவுயிர்ப்
பாயிலவுகாத்திருந்த பச்சைக்கிளியதுவும்

தேனருந்தத்தாழைமலர் சென்றசுரும்பினமும்
கானுயர்ந்ததேன்கண்டு சப்பாணிமெய்ப்பதுவும்

புல்லர்களின்வாழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்று மநுநூலுரைத்திடும்

கல்லாமலேட்டினிலே கண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையர்களுறவுசதமென்றிருந்தும்

மறுதேசம்போனபிள்ளை வஞ்சருடனேநேசம்
வருமென்றேயன்னியர்பால் வைத்தபொருள்பலதும்

தன்னைப்பெறுதொரு தந்தைதாயானவரும்
பின்னுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்கள்

பேறுகத்தம்வயிற்றில் பெற்றுவளர்க்காதபிள்ளை
ஊராருடையசெல்வ முள்ளன்பிலாதபெண்டிர்

சத்தியமாயிராறுந் தருணுதருணமது
உற்றசமயத்துக் குதவாதுகண்டீரே

ஆற்றிற்கரைத்தபுளி யனலிலேபோட்டவெண்ணெய்
காற்றிற்பறந்தபஞ்சு காட்டிலெரிந்தநிலா

விரித்தகமரினிலே வீழ்ந்ததொருபெண்பாலும்
பரித்துகடற்கழியிற் பாய்ந்தடைந்தகப்பலுந்தான்

சுட்டமண்ணுனதிலே தெளிந்திட்டபந்நீரும்
இட்டமுடன்விழலுக் கிறைத்ததொருநந்நீரும்

வீணருக்குச்செய்தான்றி வேசைக்களித்தபொருள்
காணுமிவைபத்துங் கைக்கூடாக்காரியமாம்

சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யாத்கருமம்
உப்புகாலதனிலு முவர்நிலத்திற்பெய்தமழை

பாம்பின்வாய்த்தேரை பரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவி வேந்தரிடஞ்சேர்ந்தபொருள்

தானமாயாவருக்குந் தாரைவார்த்துக்கொடுத்துப்
போனபொருள்நமன்கை புகுந்ததொருமன் னுயிரும்

ஆனைவாயின்கரும்பு மனைகடந்துபோனவெள்ளம்
வானிலத்திற்கொள்ளைபற்றி வாதையிலும்போனமுதல்

வையகத்தில்வொன்பதுவும் வாராதுவந்தாலும்
ஐயயோருலுத்த னரைக்காசுமீயானும்

கவரிமான்மயிருங் கற்புடையாள்ஸ்தன்னியமும்
அவையாதவேங்கையின்றோ லதிசூரன்கைவேலும்

ஆனாலும்லோபிபொரு ளாந்தும்வரவுயிர்கள்
போனாலேயன்றியொரு போதினுமேகிட்டாதே

கண்ணுக்கழகெட்டிக் கனிதரவாழையின்கனியும்
வன்னமுருக்கின் மலரிவையாலேதுபயன்

தாழைமடலோபெரிது சன்னமலர்மடலாம்
தாழைமலாவெய்யோன் சாய்கைபட்டால்வாசம்போம்

சன்னபகிழமலர் சருகாகக்காய்ந்தாலும்
வின்னமில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது

ஆழியில்நீரதிக மள்ளியுண்ணலாகாது
ஆழியருகூற்றுவரு மன்னீருநன்னீராம்

இங்கிவற்றையொப்பாக ஈகைசற்றுமில்லாத
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன

தேசமதுவில்லாவிடினுஞ் சிறியவுருவானாலும்
பாசமறுசற்குணமும் பலர்க்குதவியேபெரிதாம்

வேசையர்கள்நட்பும் விளக்கினதுவொளிவும்
மோசமில்லையிவ்விரண்டு மொன்றுகுமென்றனரே

கைப்பொருளற்றால்வேசி கடுகளவுநட்புமில்லை
மெய்ப்பாகயெண்ணெயற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை

நற்பிறப்புத்தமர்.

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார்
பூவைபலனேக்கார் புராணநெறியுணர்வார்

மர்தவங்கள்செய்வார் வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடராயரது துன்பத்துக்குள்ளாகார

உய்யவேயிவ்வா றுடையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினார்முன்னோர்கள்

மாதாபிதாகுருவானவரத்தெய்வத்தை
மீதாய்பணியும விசுவாசமுள்ளவர்கள்

தன்தாரமன்றிமறு தாரந்தனைநோக்கார்
புந்திமகிழ்ந்ததிதி பூசைபுரிவோரும்

சத்தியமொழிபூர்வ தர்மபரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலையதுவைத்தவரும்

பார்க்குட்சகாயமதாய்ப் பாட்டைதனைச்சீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்ப்பந்தல் மண்டபங்கூவம்வாரு

செய்யுமகாபுண்ணியத் தேகரதுமுக்தமர்க்கு
ஐய்யாமலைபோலே யாதுதுன்பம்வந்தாலும்

வெய்யல்தனைக்கண்டு விலகும்பனியெனப்போம்
கைலாசநற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும்

தாமரையின்மாமலருஞ் சவ்வாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரியுறுசிப்பிமுத்தும்

பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
கன்னயஞ்சேராவின்பால் நற்றாசுபட்டதுவும்

ஈதுபத்தானவகை யெங்கேபிறந்தாலு
மேதைபெற்றாற்போல்நல்லா ரெக்குலத்தோராயிலென்ன

உப்புங்கர்ப்பூரமது வொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கற்பூர முயர்ந்தவிலையாகுமன்றோ

எல்லோர்க்கும்ரூப மொன்றாயிருந்தாலும்
எல்லோர்தமக்குறிய ராவரோபாவிகள்தான்

பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்தினோசை விதமாகுங்கண்டீரே

நல்லதங்கத்தி னுதம்போற்சீராக
மெல்லமிருதுச்சொல் விளம்புவாருத்தமர்கள்

பன்றியைக்கண்டாலயானை பாதையில்விலகுதல்போல்
கன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால்

அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
இந்தநெறிமேலோர்கள் செய்கையென்றுசொல்வதுவாம்

நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுமென்ன கண்டனைகள்செய்தாலும்

முக்குணமேகாட்டு முறையோர்பெரியோர்க்குத்
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணமபோதாதே

சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலுமில்லை
தவஞ்சேர்ரசவாதி தனக்கணுவும்பஞ்சமில்லை

காலைதுயிலொழிதல் காணுபலேபுணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்லுவதும்

உற்றோரோடுண்ண லுயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே

உற்றபசுவானதுவு மோர்கன்றையேயீனும்
பத்தானகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான்

கோரமதுசெய்தவற்றுக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமிலலாசற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி

வங்கிஷமும்விர்த்திபாம் வண்புவியின்கோரத்தால்
பங்கமுறுகுட்டியது பத்தீன்றும்விர்த்தியில்லை

நன்மைதுன்மைரண்டுமிந்த நாட்டினுக்குத்தாட்சியதாய்
உண்மையிதுவென் றுரைத்தார்மனுநூலோர்

தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்ரர்களையோடுணவு

பெரியோர்கள்சேர்வைகுலப் பெண்ணாளனுபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி

தன்மையுடனீன்ற தாய்தந்தைசெய்தவமு
முன்னோர்செய்புண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார்

வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்புபுலிநகமு மேன்மையுள்ளபூனைமதம்

காராளைதந்தங் கவரிமான்றன்மயிருஞ்
சீரானவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம்

நாயானதுசினந்து நமைக்கடித்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோவையகத்தில்

அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்த்திறந்து பேசாரொருக்காலும்

சற்குணத்திறமேல தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வராதவர்கள் துடங்கின துங்கவசமாம்

தாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பரகதியுமுண்டாகும்

நற்பிறவி துற்சனர்.

எண்ணமல்யாதொன்று மியார்க்குமிடர்செய்வார்
எண்ணமற்கொலைகளவுக் கிறைச்சிமுதலானதுண்பர்

பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்சுசியில்லா ரிராட்சதக்கணமாகும்

அஞ்சார்தனிவழிக்கு யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்வெல்வார் வலியாரையானாலும்

ராபகலுமாறாமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார்

மாதலத்திலிந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூதகணம்பேய்க்கும் புறம்பாகுமென்றனரே

கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குபத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால்

வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாந்துற்சனரை
கண்டவுடன்காதவழிக் கப்பாலேயோடநலம்

பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
விம்பானதேள்தனக்கு விஷமதுவும்வாலினிலே

துற்சனரானவர்க்குத் தேகமெல்லாம்விஷங்கள்
மிச்சமென்றுசொல்லி விதித்தார்மனுநூலோர்

வேம்பிற்கசப்பும் மேவாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றும்போதுண்டான

வாறுபோல்துற்குணமும் வாய்ந்தபுகழ்சற்குணமும்
மீளாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது

நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும்

கண்ணிலொருநாயைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனர்க்கு வாராதுநற்குணந்தான்

எல்லாருந்தூஷணிக்க வெல்லாருங்கோளுரைப்போன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெரியுமக்கினியாம்

பொல்லாரைக்காண்பதுவும் பொல்லார்சொற்கேட்பதுவும்
பொல்லோர்குணமுரைத்த போதிலேதீதாகும்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்
காமியவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது

தலங்கள்தனைத்துதியார் தர்மர்கதைகேளார்
துலங்குநதியாடார்சுவடிவாசித்தறியார்

வாசமிகுகீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவரை நேத்திரத்திற்பார்க்கவொண்ணு

நிறை.

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது

சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது

சாணையிலேமாணிக்கந் தகர்த்துமிக்த்தேய்த்தாலும்
காணுமொளிவுமொருக் காலுமதுமங்காது

பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிதையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும்

ஆதாரமின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதிவழுவார்கள் நிறையுந்தவராரே

ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையார்
பூராயமான புருஷோத்தமநிகராம்

தன்னுடையசெய்கையைப்போல் தானெவரையும்பார்ப்பார்
சின்னமொன்றுஞ்சொல்லாதார் தெய்வப்புருஷரென்பார்

சார்ந்தவரைக்காப்பவர்கள் தன்புருஷன்மேருவாம்
ஏய்ந்தமனமறிந்து ஈவோர்புருஷரத்னம்

வாராவறுமைமிக வந்தாலுமற்பர்களைப்
பாராரேசேரார் பண்பாம்புருஷசிங்கம்

தாய்தந்தையானாலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுரைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார்

ஈகை.

ஆறுவற்றினூற்றூறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனேராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம்

நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிரையுமுண்டு

இவ்வகைபோலீவோருக் கேதிடர்கள்வந்தாலும்
இவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்லாரும்

எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்லோ கூடுமபெருஞ்செல்வம்

வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்கும்
சிந்தையுடையோர்கள் தேவரினுமேயதிகம்

தாரித்திரத்தாற் றயவில்லாதம்மிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார்

ஈயுமுதாரனைத்தா னெப்போதும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும்

ஈகைக்கிடையூறு.

தேளிடத்திலீயுமுண்டு ஜலத்தில்முதலையுண்டு
மாநிலத்தின்வீடுகளி லண்டவிடாய்நாய்களுண்டு

சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
கெந்தமிகுதாழம்பூ கிள்ளவென்றால்முள்ளுமுண்டு

கொடுக்குந்தியாகிகள்பால் கொடாமலிடையூறுசொல்லி
தடுக்குங்குலாமரங்கே தானுமுண்டேகண்டீரே

குற்றமுறைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்பார்
சுற்றமழிந்துடையுஞ் சோறுநஞ்சாகிவிடும்

சிநேகம்.

மதியினாருமயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிராகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம்

வாவிதனிற்கோடிகளும் மந்நீர்போற்றாழ்ந்துயறும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிலேமடியும்

சேரும்பெரியோர் சிநேகமிவ்வாறாகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்

சரீரசுகம்.

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார்

ஓயாவழிநடக்கா ருண்டுபலகால்விரும்பார்
காயாவதுகிழங்கு கனியுமிகத்தின்னார்கள்

தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள்

மலநீரடக்கார்கள் மடைப்பளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும்

காச்சுபால்நெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்
ஏச்சில்லார்வழுக்கை இளநீர்மிகுந்துண்பார்

ஆறுதிங்கட்கொருவிசைதா னனவிரோசனமுன்
நாரியரைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்துவரும்

உண்டபின்புலாவி யுதகமவருந்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு

ஏர்க்குமுடல்தனிலேயெப்பிணியும்வாராது
தீர்க்காயிசுண்டாகும் சேமமென்றுசெப்பினரே

மாறுபாடில்லாமல் வயிரறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலி நோயணுகமாட்டாதே

நோயணுகல்.

கல்லால்மயிராலுங் கடுகிநடையாலும்
நெல்லாலுமியாலு நிதநிரையில்லாதாலும்

ஒழியாவிசாரத்தா லுண்டபின்புழுழ்கையினல்
கழியுமலசலங்கள் கக்கிஷமாய்விழ்கையினல்

பின்னுமடக்குவதால் பெருத்தகன மசுமக்கல்
மின்னருடன்புணர்ச்சி மிகவும்விரும்புவதால்

மெய்யவனம்வேலையினல் வேர்வைபனிக்காற்றினல்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனிவுணர்வு

ஏர்க்குங்கிழங்குசரு கிலேவிரும்பியுண்ணுவதால்
பார்க்குள்வியாதிவரும் பாதையிதுவென்றுரைப்பார்

காலையிளம்வெய்யிற் காய்வோர்பிணமதனின்
மேலேவரும்புகைதன் மேலேபடுவார்கள

தன்வயதுக்கேமூத்த தையல்தனைப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள்

நால்வரிடந்தனிலே லட்சுமியுமில்லாளாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்றார்

இறந்துமிறவாதவர்.

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள்

தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவாணுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர்

வரியோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதிமன்னர் சற்புத்திரரைப்பயின்றோர்

காவியஞ்செய்கவிஞர் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலோயாமல் பொருள்கொடுத்தமாந்தர்களும்

சீரணகோபுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும்

வாகாயிருந்தாலும் வையகத்திலூழிமட்டும்
சாகாதபேர்சொற்கத் தலமீதுறைபவராம்

இருந்து மிறந்தவர்

நெடுநாள்மருமன்மனை நீங்காதிருந்தவரும்
அடைவாய்வருமகன்று னம்மான்மனைதனிலே
சதமாயிருப்பவனும் தமிழறியாமூடருமே

இதமாய்க்கவிபாடி யிரக்கப்போம்வாணர்களும்
பொய்பேசிக்கடன்வாங்கிப் பிழைத்துதிரிபவரும் ௧௯௰

மாறுவறுமையுற்றோர் வல்லமருந்துசெய்துந்
தீராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர்

மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதடுமாறிசற்றும் நீங்காக்கவலையுற்றோர்

சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்ப்பேசி வீண்வழக்குசெய்பவரும்

மனைவிதனக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
முனையாளராசசபை மூடராய்ப்போனவரும்

ஈரேழுபேருமெண் சாணுடல்படுத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தப்பிணமாமவர்கள்

சம்பத்துடன்பிணியில் தான்மெலிந்துவாழ்வதினும்
துன்பமற்றேயையமெடுத் துண்ணல்மிகவுநன்றும்

ஆனதிருமா தகன்றுவருமைந்தால்
ஞானம்பொங்கல்வியும்போம் நாடும்பழித்திடுமோம்

தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாக்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள்

மெய்சொன்னாற்பொய்யாகும் விசாரமுரம்போம்
உய்யவிருந்துவரி னுயிரோடேசெத்தபிணம்

மேன்மையறிவுகுலம் விந்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிசைந்து போவதுவேமெத்தநலம் எ

சேனைமருந்துசெய்யுந் திராவியாதியுற்றால்
மானிலத்திற்றனுக மானுவதேயுத்தமமாம்

பொருளின்பலன்.

பொருள்தேடதுக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமதாம்
பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமதாம்

காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட
மோகமுடன்காகமுந்தான் முட்டையென்றேஎண்ணுதல்போல்

ஈய்கள்தேன்கூட்டி யெடுப்பாரிடங்கொடுத்து
போயலைகின்றதொரு புத்தியீனம்போலும்

சோறத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடி
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும்

மயலாகத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்
மயலாகபொருளுமல்ல அவன்பொருளுமல்லவென்பார்

உற்றபொருள்தேடமன முற்றாலுலகமுமே
நற்றுதஞானிக்கு காடெல்லாந்தன்னடிமை

பொன்னறியாமூடனிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்
மன்னுக்குரக்கைப்பூ மாலைப்போல்கொண்டலைவார்

மன்னுங்குரங்கைப்பூ மாலைபோல்கொண்டலைவார்
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொன்னொருமசகம்

பொன்னாசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை எஅ

வெட்கமில்லைபோகலாம் வேளையின்னதென்றுமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க் கிணையாகுமென்றனரே

பொருள்வகை,

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்லதனை
நித்தமெடுக்கிலந்த நெல்லுமற்றுபோவதுபோல்

ஏலநமக்கு மெழுத்தினளவாக்குஞ்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி

மாசவருடமென்று மாதத்துகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல்

இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமாந்தர்களை

ஸ்ரீதேவிபூதேவி சிரிப்பாரிவன்றேனீயாம்
மூதேவிசென்மமென்று மொழிந்தார்மனுநூலோர்

மிக்கதர்மம்பொருளா மின்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடும்பொருள் நல்லயமுமின்பமுறும்

வஞ்சனையாய்த்தேடுபொருள் அந்தனையுமாகாது
மிஞ்சுபழிபகையா மென்பதனையுண்டாக்கும்

கூத்துபார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும்

கூத்துமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போலாய்விடுமா மைஸ்வரியமுள்ளதெல்லாம் ௭௨௰

புண்ணியமெந்நாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாது

நல்லறிவு கயவர்,

தன்னைப்புகழ்வோருந்தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றம்விலக்கி யயலார்க்குதவுபவா

மேலோர்சொற்கேளாதோர் வேசைசதமென்றிருப்போர்
பூலோகத்தொப்பனையைப் பொய்யென்றுரைப்பவருங்

கண்டாலுறவாடிக் காணாவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாள்செய்யுங் குறையைவெளிச்சொல்பவரும்

பொய்சாட்சிசொல்வோர் போற்றிவைத்துப்பிச்சைகொள்வோர்
தையல்சொற்கேட்பதுவுஞ் சபையில்பயனில்லா

வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தபன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதராம்பசாசிவரே

அக்கினியைக்கட்டலா மகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருகஷ்ட மிருகமிணங்கிடலாம்

வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்குயிர்தரலாம்
வெல்லரியபேயனையு மிரட்டியேயோட்டிடலாம்

பறவைமிருகம்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரைப்போகவுஞ்செய்திடலாம் மறலியிடதூதரையும்

மணலைக்கயிறுக்கி வைக்கலாங்கயவர்களின்
குணமதனைத்திருப்பக் கூடாதுகண்டீரே எகூ-டு

வெல்லமிகக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும்

புல்லறிவுகயவர்.

சாதிகுணங்காட்டுக் ககமைபோல்புல்லருக்கு
வதுரைத்துஞ்சற்குணங்க ளொள்ளளவும்வாராது

செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வரம்புசற்றுமிலை சுற்றந்தனைநோக்கார்

தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாதே

உண்டென்றுநாளு முலகமுறைப்பதனை
திண்டுமிண்டாயில்லையென்று செப்புமவர்பேயெனலாம்

தோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டனக்கால்
சீலமுடன்வயிற்றிற் செரியாதவாறதுபோல்

சண்டாளரானவர்க்குத் தர்மநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும்

புலிக்கஞ்சியோர்வேடன் போய்மரத்திலேயேற
வலுக்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க

ஞானிக்குசுகமுமில்லை நாட்டிலோர்சாதியில்லை
காமிமேலச்சர்களுக் கெப்போதுநிரையுமில்லை

காமிக்கொருவரம்பு கருத்துமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை

சத்தசுத்தபூசைக்குத் தானுமங்ககசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை

புல்லறிவு.

கள்ளருக்குற்றாருமில்லை கடடருக்குஞானமில்லை
எள்ளளவுந்துன்பங்களேதுசுத்தவீரனுக்கு

பொய்யனுக்சச்சாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆனதொருநேயரில்லை

தான்பிடித்தபிடியாகச் சாதிப்பவன்குறங்கு
ஆனசபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம் ௭௯௰

எளியருடனெதிர்ப்போனெற்றடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம்

வந்தோர்முகம்பாரான் வனத்திலிருக்குங்கரடி
பந்தமுறுசபையிற் படுப்போன்கிடாமாடு

அடுத்தோர்க்கிடர்விளைக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிடப் புல்லன்வலிசாறை

சற்றேனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கறியான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம்

தன்புத்தியன்றிபிறர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றுவானரமாம் வாய்பேசாவூமையென்பார்

அம்புவியையாளு மரசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி

கொட்டுந்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்கரடி கொடியவனமிருகம்

மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வகுத்தசிலை

பண்டிதாள் பரிட்சை.

முக்கியஞ்சேர் நூலின் முறையுந்தெரியறிந்து
பக்குவமில்லாநாடிப் பரீட்சைதனையறிந்து

தேடியழைத்தபின்போய்த் தேகங்குணங்காலம்
பாடுகின்றநாடிகேட்டுப் பரீட்சைகளுந்தானறிந்து

சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூறறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து

கற்பங்கியாழங்கள் கனகுளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும்

இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவையாமல்

எளிதானபத்தியத்தி லெப்பிணியும்நீக்குவித்து
தெளிவானவாரோக்ய ஸ்நானமிகச்செய்வித்து

தந்ததேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனே
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்வந்திரியெனலாம்

மிக்கபிணிவந்தால் வேணபொருள்தாரனென்று
மிக்ககுலதெய்வம்போல்மேன்மைமிகச்செய்வார்கள்

உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னாலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள்

பாதிலகுவானால் பண்பிற்றமையனாம்
பாதியுந்தீர்ந்துவிட்டாற் பரிகாசமைத்துனனாம்

ஏதுபொருளானாலு மீவதுமுன்னோயனாம்
காதலுடன்மற்றுநாள் கடனாளியாவானே

ஆப்பாற்பகையாளி யாவர்கள்பண்டிதர்கள்
இப்படிசெய்லோப ரிருப்பாருலகினிலே

தீருதநோயருமை செப்பாதசொப்பரிடம்
வேறானபண்டிதரை மேல்மருந்துகேட்பவர்பால்

மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாப்பிரியா
நோக்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில்

கத்ததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள்
பத்தியத்தைதாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான்

மட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனயீந்தாலும்
எட்டியடிவைப்ப தியல்பல்லபண்டிதற்கே

சுத்தம்.

வெண்ணீருடன் துளசி வில்வமருச்சுகந்தம்
பண்ணும்புதுப்பாண்டம் பழுவர்க்கங்காயிலைகள்

சென்னல்கவசமுடன் செம்பிருப்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணும்நவமணிகள்

கோதில்லாவெண்பட்டு கோடிதுகில்பாவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்பதிவ்வகைகள்

கீழோர்பாலுற்றிடினுங் கீழோர்களீந்தாலும்
தாழ்வில்லாமேலவர் தானிதனையேற்றிடலாம்

ஆசைமிஞ்சுமின்னா ரதரபானத்திற்கும்
பேசரியாப்பாலர்கள் போந்தசிறுநீரதற்கும்

வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமுந்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்கும் எ௰

இந்தவகைகளுக்கு மெச்சிலையென்றுசொல்லி
முந்தமனுநூலின் முறையிலுரைத்தனரே

எத்தொழிலுமெக்கலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றவருஞ் சொல்லுதற்குநாவுளதோ

ஆகாமை

மன்னர்பகையு மாதவத்தோர்தன்பகையும்
வின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை

ஊரார்பகையு முற்றுநடன்பகையும்
வீராணமந்திரிபகை மிகுந்தபணக்காரர்பகை

வல்லகணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரவாதிபகை

பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினேழி லொருபகையுமாகாதே

ஆறடுத்தவூரதுவு மரசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுத்தபோராறும்

தாசியுறவுபிறர் தாரமின்னார்நேசமதும்
நேசமில்லாத்தாயாதி நேசமாகாதுற்சனர்கள்

தன்னோடிணங்குவதுஞ் சத்ராதிகட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகடுநடத்துவதும்

மெய்விளங்கும்போதினிலே மின்னாருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும்

நஞ்சுடனேதிமருந்தால் நாளும்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலகைகளையோட்டுவதும்

ஆர்க்குங்கடலோட மதிலேதான்சஞ்சரித்தால்
யார்க்குமதாவுண்ணல் பலநாள்களவுசெய்தல்

இத்தகையாய்ச்சொன்ன திருபதையுமேமனதி
லுற்றுலிடறு முயிர்க்குலயமாமிதுவே

சாரார்பயிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்போயபாதையந்த யோரம்பயிரிடுவோர்

பிணைட்டுபொய்சாட்சி பேசுமிவர்நால்வாகளும்
சுணைகெட்டபேரிவர்கள் துன்பத்திற்குள்ளாவார்

சிற்றூர்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிரளாய்ப் பெண்ணுகபெற்றவரும்

ஆற்பனைச்சேவிப்பவரு மலக்கழிந்துபோவதல்லார்
சொற்பச்சிலநாளில் தொந்தரைக்குள்ளாவார்கள்

அத்திக்காய்கோவைக்கா யைவிரலிதேற்றான்காய்
சுத்தவெள்ளைக்கத்தரிக்காய் சோற்றுக்காந்தலிலைகள்

இன்பார்களொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மனுநூலில்

துரந்தோரடங்காதார் துன்னிபிணியோர்களையும்
புறம்பேசும்வஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும் ஆாய்

கல்லாலவனெஞ்சிற் காணும்லவெண்மறையும்
நல்லசபையிலொரு நாளுமவைத்துபம்பசவொண்ணு

ஆசனங்கள்தான்போடி லாயிசிதுவிர்த்தியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேஅயிஸ்வரியம்

தனக்கெண்ணெய்தான்தேய்த்தால் சந்ததிகட்காகாது
அனர்த்தமிதுமூன்றென் றருளினர்முன்னோர்கள்

யோகியொருபோதே யுண்பானிருபோது
போகியுண்பான்மூன்று போதுண்பான்வியாதியஸ்தன்

உடனொருகான்குபோ தூண்ணுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள்
வீரதனிலொப்பில்லா விக்ரமனேயானாலும்
வீரியமும்வாறும் விளம்பிடவுமாகாது
வேந்தர்குருபொய்யர் மேன்மையுள்ளோர்கோபிகட்கும்
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல
காட்டுக்காகாதவரை நமக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமந்தராஜனுக்கு மேலானமந்திரியை
துற்சனர்சினேகமதை தொட்டாவசையும்பல்லு
இட்சணமேயைந்து மெடுத்துவிடவேணுமென்பார்
கடன்பட்டுத்தரித்தோர் கைச்சீட்டிலேசேஷம்
விடந்தீண்டி மீண்டதிலே யெவ்வளவுமேசேஷம் அஉய
அக்கினியில்வெந்த அகந்தனிலேசேஷம்
மிக்காணசத்துருவை வெல்லுவதிலேசேஷம்
தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதில்சேஷம்
உய்யப்பிணிமருந் துண்டதிலேபின்சேஷம்
வாணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மணுவும்வைக்கலாகாது

பலனில்லாமை.

சந்திரனில்லாவானஞ் சற்சனிரில்லாதவூர்
மந்திரியில்லாவாசல் மதகரியில்லாவெம்போர்
மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதகவி
தக்கதினபதிகள் தானில்லாவெஞ்சேனை
பெண்ணரில்லாதமனை பிறவியில்லாதவுடன்
விண்ணணபாடல் வினையமில்லாவேசி
கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாபெண்ணழகும்
தாப்பில்லாச்சீவனங்கள் தந்திகளில்லாவீணை
பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுரம்
சத்தியமில்லாதவாய் தானறியாவாணிபங்கள்
சந்தமில்லான்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
நந்தாப்புனல்சேர் நதிவளமில்லாநாடு

தேசிகனில்லாவித்தை தியானமதில்லாதீட்சை
பேசரியநல்லறிஞர் பெரியோரிலாதசபை அ௨ய

குடிநலமில்லாநாடு குணமில்லாப்பெண்ணுசை
வடிவுற்றுவாசமில்லா வானமிகுமலரும்

சேகரமில்லாக்கதை தீபமில்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுசியில்லாபோசனமும்

கல்வியில்லாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணான்கில் வரும்பயன்களொன்றுமில்லை

தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராசாவும்

வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசைபரும்வெட்கமில்லை
மிக்ககுலப்பெண்டீர் மேன்மையில்லைகஷ்டம்வரும்

அன்னைசிறந்தாலுண வானதெலாம்நட்டமாம்
பின்னைப்பிதாவிறந்தாற் பேரானவித்தைநட்டம்

உற்றதுணையிறந்தா லுடலிலேபாதிநஷ்டம்
மற்றுமனையா லன்றுதலைபோனதென்பார்

பலரும்போய்ப்பாபம் பண்ணுவிக்கும்விந்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணெனும்

அந்தரித்திரருக் கழகுடையபெண்டிரும்
இத்தன்மைமூன்றிலு மெய்தும்பலனிலையே

வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுண்சோர் பிசாசுக்கேம்பூசை

பொன்னுள்ளோர்க்கீய்ந்தபொருள் போதவிந்நான்கினிலும்
என்னபலனுமில்லை என்றனரேமுந்நூலோர்

அந்தணர்க்குமாவார்க்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன

யார்க்குமுறையாதவித்தை யனேகவிதமாகிப்
பார்க்குள்படித்தென்ன படியாதிருந்துமென்ன

என்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல

தன்னுல்திருவகிக்கத் தகாதவிரதமுற்றால்
என்னபலனுமில்லை யீடறுவருமுத்தியல்ல

தருணமறிந்துதவாத் தன்மைசேர்நண்பாளர்
அருமையாய்ப்பின்னு லுதவியுதவாமலென்ன

வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணாலும்
சாலவிர்த்தாபியத்திற் சார்ந்தென்னநீங்கிலென்ன

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
வரிசையுடனணிந்தால் வையகத்தோரேசுவார்

பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாது

பல்லில்லாதோருமற்றப் பசியுள்ளோரானவரும்
நல்லருசிகாணாரென்று நவின்றார்மனுநூலோர் அ.நி.ய

தெய்வதவக்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும்
மெய்யென்றுரைப்பவர்க்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே

பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றாகுமுத்தமமாம்

சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதல்போல்கொடுக்கும் பண்பதுவேமத்திமமாம்

வருடமெலாம்பாடுபட்டால் வாழையொருவிசைதான்
தருமபலன்போல்கொடுக்குந் தர்மமுமேயதர்மமுமாம்

தெண்டனையில்லாவேலை சேயரில்லாமனைவி
கொண்டவர்க்குலடங்காக் கொம்பனையாலிவ்வாழ்க்கை

வண்டரிணக்கம் வறுமைதணிற்சேர்க்கும்
மண்டலத்திலில்லைவந்தும் வளர்க்கரவுமாட்டாதே

மாரிகாணாதபயிர் மக்களில்லாயில்வாழ்க்கை
எறிகுளமில்லாவூ ரிரவிகாணாவசனம்

அன்னைகாணாகபிள்ளை ஆவினைக்காணாதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணாதவுடல்

காவுகாணாதவண்டு கலைகள்காணாக்குமரன்
மேவுகொழுநனில்லா மெல்லியர்களானவரும்

தோழர்காணுனேசர் சோடுகாணுப்பேடு
மீளுமதிகாணுத வெண்குமுதமானதுவும்

பெரியோரில்லாதசபை பெண்கள்தனில்மூத்தாள்
உரியதியாகியல்லா வூர்பதினேழாமிவைகள்

தாழ்வுதருமல்லாது சாந்தவளமாகாது
வாழ்வுகாணுவிளமை வாறுகுமென்றிடுவார்

நல்லோர்க்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகையெழுத்தாம்
பொல்லார்க்குச்செய்தநன்றி பொய்கையுறும்நீரெழுத்தாம்

சுற்றமுன்னுயில்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதும்
கற்றறியான்பாடுகவி கைம்பண்ணிலேயழகும்

துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிவையாறும் வீணும்பலனிலையே

ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குச் செய்தவுபகாரம்

மேலுமூவர்நிலத்தில் விதைத்ததொருநல்வித்தையும்
சாலயிவைமூன்றுற்றுந் தண்ணீர்கரைத்தபுளி

குதிரைக்கிறுவுத்தன் கூறுகவிப்புலவன்
கதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம்

வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காசையாய்ப்பாடுவனு மைவருந்தானில்லாவிட்டால்

ஏத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பலனிலையே

தேவாலயஞ்சுற்றித் திரும்பாததான்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணோ

பகவான்தியானமதைப் பண்ணுதசிந்தையென்ன
ஜெகநீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன

சிவன்மாலையுந்திதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ

தினமும்புராணகதை கேளாததென்னசெவி
முனியானபுண்யநதி மூழ்காததென்னவுடல்

மேவிமிவையெட்டு மில்லாதோன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம்

ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆனதொருபூவலஞ்செய் வானாகிவிவேகியுமாய்

மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்தியவான்
உக்ராணவீர னுபகாரியாவருக்கும்

இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னென்றவனைச்சொல்லவொண்ணா

ஓர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம்

லோபத்தனம்.

தேன்றுளியொன்றாற்கடலைத் தித்திக்கச்செய்தாலு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும்

பூவினால்வச்சிரத்தைப் பேர்த்துதுளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெய்ஞ்ஞானம்வந்தாலும்

ஊமைபடித்திடினு மூர்க்கமிலாப்பேடிக்கு
தாமேதான்வீர்ய தைரியமுண்டாயிடினும்

நித்தங்கபவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோபர்களுக் கீகைசற்றும்வாராதே

தின்னாமலுண்ணாமற் றேடிமிகச்சேர்த்து
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்குலுத்தர்பொருள்

தெண்டம்பெரும்பிடிக்கும் திக்குந்திருடருக்கும்
வண்டமனவேசைகட்கும் வலுவந்தகாரருக்கும்

இதமில்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமேயலா வுலுத்தர்பொருளதுதான்

ஆகாப்பதரெனினு மரியவிபூதியைவிளக்கும்
வாகாப்பழுஞ்சுவரும் மாடுறைஞ்சுமுள்மரமாம்

மாடுகடாவதுவும் வையகத்திலேயுழவாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால்

செத்தபிணமானாலுஞ் சிறிதுவுபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையால்

கல்லாலேயாலயங்கள் களத்தபணியுண்டு
அல்லற்கழுதையென்று லழுக்குப்பொதிசுமக்கும்

வாறுகோலானாலு மாளிகையெலாம்விளக்கும்
பேருய்க்குரங்கு பிடித்தார்க்குதவிசெய்யும்

ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும்

நெல்லின்பதரென்ன நீரினிலேபாசியென்ன
நல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன

ஸ்ரீதேவியாருடனே சீர்கேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால்

தயவாயொருவயிற்றில் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும்

உச்சிதமாயார்க்குமுதவில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுவூரில்நிற்பதொக்கும்

செத்தபிணமதனைச் சிங்காரித்தாலதென்ன
கைத்தலத்தினாலிழுத்து காட்டிலேபோட்டுமென்ன

நாயானதுகொழுத்தால் நாட்டிலதையார்புசிப்பார்
ஈயாதலோபியற்கு எல்லாமிருந்துமென்ன

ஈயர்தயில்மாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார்

இகழ்ச்சியினம்,

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடையலவும்

ஆதரவில்லாதபெண்டீ ரருமையில்லாசேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைபெற்றதுவும்

ஊழ்வினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவிரைந்தும் வசையாகுங்கண்டீரே

நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும்நெய்நுழையாச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில்

மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானும்

தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
ஒக்கவிருந்துண்பதிலு மோடெடுத்திரத்தல்நன்று

தூயவறிவில்லா சுதனைப்பெருவதிலும்
பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று

உள்ளன்பில்லார்க ளுடனட்புக்கொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தல்நன்று

வெளிவிடக்கூடாதவை,

ஆசானுபதேச மரிவையர்கள்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்கமுற்றபொருள்

மானம்பிறர்மான மறந்துடனேதான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தானத்தினன்வினையும்

இல்லறத்தின்கேவலர்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணாதீனமென்று சொன்னார்மநுநாலோர்

தன்னகத்தாளன்றுமறு தாரமேலாசையுற்றால்
பின்னொருவர்தாரமது பெண்டீரைச்சேராரோ

பறையன்பறையநல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்
யுறைவோன்பறையனென்று பகர்ந்தாரேமுன்னூலோர்

ஞானமுஞ்சற்குணமு நாளுமில்லான்கற்றகல்வி
ஈனப்பறையர்வீட்டி லிருக்குங்கங்காசலமாம்

தண்ணீர்நன்மை தரையுவற்றினாலழியும்
பெண்கேணோர்கள்நன்மை பிறாகமலத்தாலழியும்

கோதில்லாமாதவசு கோபத்தினாலழியும்
வேதகுலநன்மை விபசாரத்தாலழியும்

மன்னவர்கள்நன்மை மனுநீதியாலழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி

பொல்லாததன்னகத்துப் பெண்ணாலழியுமென்று
வல்லோர்கள்முன்னால் மனுநூலுரைத்தனரே

பருவகமும்பார்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தி லரியானும்வாழ்வதுபோல்

பூமியிலேதங்கள்மனைப் பெண்ணாள்பிறந்தவிட்
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள்

கேடு

காவலர்களாணை கெடுப்பதுவுமேயடங்கா
நாவுமிகுகோபமுட னமதுரைகேளாவடிமை

ஆதாயமின்றி யதிகச்செலவுகளும்
காதாரககேளாசசொல் கவியில்மிச்சங்கண்டெழுதும்

சாட்சிமிஞ்சும்வழக்குந் தயிரியமிஞ்சுங்கவலை
பேச்சில்சரசமிஞ்சிப் பேசுபரிகாசமுமாம்

பத்தாவின்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிடதுன்பமுமாம்

ஓரவிகாரமா யுயர்ந்தோற்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க உலகமதுநடுங்கும

உப்பிட்டபாண்டமிலை யுபர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வும்போ மூற்றார்பெற்றார்பாழாம்

மாதேவியான மலர்மாதகன்றிடுவாள்
மூதேவிசேர்வாள் முடிவில்நரகமெய்தும்

என்னேரஞ்சண்டையு மட்டில்லாச்சிரிப்பதுவும்
சின்னஞ்சிரியாரிணக்கக் தீராக்கொடுங்கொர்வம்

வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசாராய்ச்சேவகர்க ளாறுமிவைகேடெய்தும்

தேடாப்பொருளழித்தல்தீராதகோபம்ரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே

ஞானந்தனங்கல்வி நாடிவருங் சால
மானோர்மேலாசைதரும் வாழ்வும்போக்துக்கமுமாம்

என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுடிவுண்டாம்
மனமறிந்துசெய்நன்றி மறந்தார்க்கீடேற்றமில்லை

இமிசைப்பட்டாற்று தேழையழுதகண்ணீர்
வமிசத்தைதேய்க்கு மாமுங்கூர்வாளெனதால்

இங்காணவாங்காரஞ் செல்லுமிடமானதன்றித்
தாங்காவிடஞ்செலுத்தல் தப்பாமற்கேடுவரும்

தாழ்ந்தாருயர்ந்தார் சரியாமெனவறிவால்
ஆய்ந்துமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும்

சரியானபேரையன்றித் தன்னிலதிகபல
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும்

இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுற்பாதம்
புத்தப்பிரதானமாய் பொல்லாங்குசெய்வார்கள்

புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரர் யற்பாயுசாவர்கள்

ஏர்க்கையுடனிவழ யேதேதுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில்

பின்னாலே துன்பம் பிணக்குமிகவுண்டாகும்
அந்நாளேகிரியினா லைந்துகுடிக்கெட்டதொக்கும்

சத்ராதிசொல்லைத் தந்தாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும்

கொடுத்தகடன்கேட்டாற் கோபங்களுற்றவரும்
எடுப்பாய்பெரியோரை யெண்ணாமற்பேசினவர் ௯௪௰

பெரியதனம்வந்தவுடன் பின்முன்னும்பாராமல்
இருவழியாற்சற்று மேரிட்டுபோராதார்

இனியபரிதானத்தி லிச்சைவைத்தேயொருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள்

பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரெழுவருங்கெடுவர் பேய்நாய்ப்பிறப்பாகும்

கூடிப்பிரிவதனால் கொடியசூதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கணிதமில்லையென்றனரே

கண்ணினாற்காண்பதுவுங் காதினாற்கேட்பதுவுந்
திண்ணமுடன்முன்பின்னாய்ச் செப்பினாற்கேடுவரும்

வித்தமகன்மைஸ்வரி மேதுங்கிளிகூட்ட
மற்றும்பயருழியி னாலுமகிட்சியினால்

ஏர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தல்
தீர்க்கமிடிகேடுவருந் திண்ணவனார்வள்ளுவனார்

நெஞ்சிற்பயமதுதா னேரிடயாவரையும்
அஞ்சவஞ்சச்செய்தா லவர்கட்குக்கேடுவரும்

தினையளவுநன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அணுப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால்

அந்தணர்க்குங்கோவுகட்டு மடாதுபொல்லாங்குசெய்த
கித்தனையும்வந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார்

ஆவலுடன்தன்பிழைப்புக் காகாவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செய்வாரேயாமாகில்

நீண்டொருதனநிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறானாலு மவரைவிட்டுப்போகாது

முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும்
பின்னாலேழேழ் பிறப்புமவிட்டுப்போகாது

செய்ததொருதீவினைதான் செய்தவர்க்கெப்போது
மெய்துமென்றுசொல்லி விளம்பினார்வள்ளுவரும்

அரிது.

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொரு கூன்குருடு ஊமைசெவிடுபேடும்

நீக்கிப்பிறக்கரிது நோய்ப்பிறந்தாலும்
தீக்கமுற்றஞானஞ் சிறந்தகல்விநற்குணங்கள்

வாராதரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நோய்த்தரிக்கிறது நெஞ்சிற்றரித்தாக்கால்

நீணிலத்திற்றுன்றாமல் நெடுநாளும்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே

இனிது.

இனிதினிதுவேதாந்த மினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிதுகாணுங்கண் ணேதுங்கேளாச்செவியே

கொடிது,

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமைதனிலேவறுமை ௯௯ய

அதிற்கொடியதாமருந்தி லகலாதவெவ்வியநோய்
அதனிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம்

அதனில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதனிற்கொடிதுண்டவளோடுறங்குவதே

பெரிது,

பெரிதுபெரிதிந்தப் பேருலகநான்முகன்றன்
வரியைப்படைப்பாகு மவன்மால்வயிற்றுதித்தோன்

மாலோகடல்துயின்றான் வாரிகுருமுனிவன்
பாலெடுக்கமாமுனிவன் பண்டொடுக்கும்பமதில்

கும்பமேமாபூமியதிற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியாந் தலைப்பாரஞ்சேடனுக்கு

சேடனுமையர்ல் சிறுவிரலினாழியாம்
ஈடில்லாதவுமையா ளிறையவர்க்குள்ளொடுக்கம்

தொண்டரிதயத் தொடுக்கமிறைவன்றான்
தோண்டகபெருமைதனைச் சொல்லமுடியாததுவாம்

முக்கியமுள்ளது.

தலத்தினிற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பிலத்திலேமாருதமாம் பிர்ணவமா மந்திரத்தில்

வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு

நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவதிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிரவணமாம்

வாரத்திலாதித்த வாரமந்தகான்மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியில்நாரதனும்

தனத்திற்குபேரன் தானமேதானமுமாம்
மனுக்களிலேராசாக்கள் வாரியிலேபார்க்கடலாம்

மோகத்திற்புட்கரமாம் விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகந்தனிற்சிறேஷ்ட மச்சுவமேதமென்பார்

மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுபசுவில் கங்கைநதியாம்நதியில்

தமிழிலகத்தியாரந் தந்தையிலேராவதமாந்
தமனியமாமலோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம்

பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம் வடிவதனிலோதியாம்

கற்பிலருந்ததியாங் கபிலராஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமசந்திரனும்

அசுராகுலத்திற்பிறகலாதனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும்

சங்கித்திற்பாஞ்சசன்யஞ் சந்திரனுங்கிரகத்தில்
சங்கும்பதவியிலே சாயுச்சியமாகும்

போகத்திலிந்திரனும் புஷ்பகமவர்மனத்தில்
வாகொத்தவில்விறத்தின் வாழ்விலேமைந்தர்களாம் ௬௮

உடையிலேபட்டாடை யுக்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதான்கர்னன் குணமூன்றில்சாத்மீகம்

மன்னும்புராணத்தில் மாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம்

ஆடுமீனிராறில் நகக்துலாமாகும்
வாடாதநுண்ணியநூல் வள்ளுவனாற்சொற்குறலாம்

சுவையாறிலேல்லவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடந் தேசத்தில்சோழதேசம்

பொறுமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோதேயதிகம்

ஓசையிலடியேறு ஊரில்யோக்கியதாம்
ராசரிலேராசாதி ராஜனுமவிக்கிரமன்

ஆன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குமே
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே

கொடுமையாலழிந்தல்.

தக்கனிரணியனுஞ் சக்கிரவர்த்தியாம்நிதியும்
மிக்கானவாகுலங்கள் மேனுலேநகுலன்

பந்தமூறுஇன்றசிசு பாலனவர்களும்
நிந்தனையினாலே நிர்மூலமானர்கள்

கஞ்சன் துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கவந்தன்

பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பணகி
வாதுபுரிந்தந்த வக்கிரனுமென்பவனும்

சகனுடன்வில்வலனுஞ் சலேந்திரமகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனுளதாசூரன்

மிஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினாலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார்

சூரனுடன்தாருகனுந் தூர்ப்பானுகோபனுடன்
வீரமிகுசிங்கமுகன் மின்றூளசோமுகியும்

தீயராமந்தத் திரிபுராளானவரும்
மாயமதுகைடவர்கள் மாபாவிதுந்துபியும்

மாலிசுமாலியுடன் மகிடாசூரன்சம்பரம்
காலகேயநிவாத கவசருடன்தாடகையும்

இடும்பன்பகாசூரனிரணியாட்சதனென்போன்
கடுங்கோபச்சதுரான் காலகதியாலழிந்தார்

தாசியங்கம்.

புருவநெறியாமல்விழி புரளாமலேவெளியில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல்

அணுவளவுந்தலையை யசைக்காமலேமிடறு
தனில்பொருளாமல்சுருதி தந்தியைக்கியானம்

நீதியாய்த்தொனிவீணை நேராயதிற்றந்தி
நாதமிட்டுப்பூசை ரண்டுஞ்சரிபாகம்

அமூர்த்தாசதாளி யாய்மதுரசங்கிதம்
காமரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார்

காயமேல்விழியுமுயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயலயிகயமுங் காட்டுமவளேபாதம்

பாதாளச்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
வாதானஞ்செய்பவளை மத்திமமாமென்றிடலாம்

பாலராககீதங்கள் பாங்கானதாளங்கள்
கலமாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும்

தானத்திலேவினைவு தரித்துநடனமிடுமே
வானுற்றசற்பாத்ர மறிவானட்டுவனும்

தாளலயமார்க்கந் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பகைச்சேவைவ் விழைவோன்பரிசனனும்

வேசையர்தமில்லம்விட்டு மேல்விடமுஞ்சென்றுக்காசு
காசுபணமற்பமுமாய்க் கணிசங்குலைந்துவிடும்

வேசையர்கள் வரலாறு.

மிக்கவிலைமாதர் விசிசந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுகாண்

சந்தியிற்பாய்மெத்தைதாந் தண்ணீர்பந்தலதாம்
பந்தமுறுதேகம் படித்துறையதென்றிடலாம் தய

ஞாநசோலைதுகில் துடைகள்தண்ணீர்பந்தல்
வீதிலேகட்டிவைத்த மிக்கசதலிமரம்

மையாடுங்கன்னியவள் வாரணிந்தகொங்கைரெண்டும்
கையாடும்பந்து கடையெலுமிச்சம்பழமாம்

பாகமுறுசெவ்வாய் படிகமதிற்கொப்பாகும்
ஏகுமவள்மோகமது எட்டிக்கனியெனலாம்

பாசமுடனிவ்வாறு பாங்குடையார்நீங்குபுரி
வேசையர்மேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மையல்ல

பெண்களால் பங்கமடைந்தவர்.

சந்திரனுமிந்திரனுந் தன்னுடலிற்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும்

எண்ணறியவாழ்வுடைய யிராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள்

சுந்தோபசுந்தரென்னுஞ் சூரரிருவர்களும்
அந்தமிகுமோகினிமே லாசைகொண்டுமாண்டார்கள்

வையகத்திலொப்பில்லா வாயிலனுமெழில்சேர்
தையலரைக்கண்டால் சவுரியமும்மில்லாது

மானார்குணங்குறியிவ் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும்

புருஷன்வாக்கிய பரிபாலனஞ்செய்தவர்.

ஆதியருந்ததியின் னனுசூயைசிகையுஞ்
சாதுகுணச்சாலை சந்திரவதியென்பவளும் தஉய

உத்தமியில்மிக்காக வோதுகளாகினியும்
பத்தாவின்வாக்கியபரி பாலனையேசெய்தவராம்

மூன்றுயுகத்திலும் யமனானோர்.

திரேதாயுகத்திற் கெடுகோலிரேணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணாகும்
துன்னுதுவாபரத்திற் றுரோபதையேகூற்றுவனாம்
இந்நாள்கலியுகத்தி லில்லமெலாங்கூற்றுப்பெண்

பெண்களுக்குச் சுவாதீனமில்லையெனல்

பெற்றோர்கள்பேதையிலும் பின்பருவத்திற்புருஷன்
மற்றவருமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம்
முக்காலும்பெண்ணுக்கு முயர்ச்சியொன்றுமில்லாதால்
மிக்கானபெண்சன்மம் வீண்சன்மமாகுமென்றார்

புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதானவாண்சன்மத் ததிகமென்றுசொல்லினரே
பத்தாவேதெய்வமென்று பணிந்தேற்றுங்கற்புடையா
ளூற்றமழைபெய்யென் றுரைத்தாலும்மாரிபெய்யும்
மேன்தவமுருடனே மேன்மையுள்ளமின்னாளோர்
புத்திரனைப்பெற்றவன்றே பேரழகுமேன்மைகளும்

பெண்கள் வரலாறு,

மேலான கன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குலமகளாகாப்பேருமில்லை
சதிராய்த்தன்னில்லைவிட்டுத் தனிவழிபோமின்னோர்க்குப்
பதிவிரதா தாபமில்லை பங்கம்வந்துசேரிடுமாம்
சரசகுணமில்லாத தையலரைச்சேர்வதிலும்
விரைவாகச்சந்நியாச வேஷமுற்றல்நன்றாகும்
அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் மூலைகண்டாற்போதாதோ
பேரிளம்பெண்கள்பல பேரைபுணர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று
துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியரைக்கூடல்நன்றாம்

பெண்ணொருத்திபேசினாற் பேருலகமும்நடுங்கும்
பெண்ணிருவர்பேசினாற் பெருவானிளைமீனுதிரும்

அலைவாரியுஞ்சுவறு மாயிழைபார்மூவருக்கும
பலபேர்தன்கூடிலென்ன பாடுபடுமோபூமி

ஆசைகொண்டான்போலே யபினயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமறியாமல்

அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாம் நாயினுங்கீழாவார்

கர்மகாண்டம்.

பூதலத்தோர்காகப் பொதியமுனிநாயனுமுன்
காதலுற்றுச்சொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம்

சமமில்லாதார்க்குச் சனமாமகாநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன்

செய்யவுருவழித்தல் சீவசெந்தைவதைத்தல்
வைதுதந்தைதாயை மனம்நோகவேபேசல்

நந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல ராதவரும்பூகொய்தல்

இட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்குங்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே

நாகமுடனூர்வனங்கள் நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு

குதிலாவலிக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவிசைத்தார்

உத்தமரைப்பழித்து உதாசினங்கள்பேசவதும்
பத்தர்சித்தர்பாவம் பற்றித்துடர்ந்ததினால்

ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோதுபடச்சினந்து கொடுங்கோபம்செய்வதினால்

கற்புடையமின்னாற்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாலயித்தந் தலைக்கேறியேபிதற்றி

பண்பாய்பலகிரி பதினெட்டுமென்று
மூன்பாகத்தட்சணா மூர்த்திமொழிந்தனரே

மநுநீதிகாதல்.

பச்சைமரங்கள்தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
பிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும்

குளிர்ந்தமரத்திலேகாய் கொம்புதனைமுறித்தல்
அருந்தமலராப்பூவை யவைவரதங்கிள்ளினதால்

மண்டைக்கரப்பன் வாயுவொருதலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தானயினசங்கள்

மாருக்கபாலத்தின் வாய்வாசநோய்தானும்
வீறுய்வந்தெய்துமென்று விளம்பினார்மாமுனிவன்

வித்தானதையழித்து மேலுமீதைத்தின்றதினால்
பக்தியுடனகன்றுக்குப் பால்விடாத்தோஷமதால்

பாலகனையழக்துப் பச்சைமரப்பிச்சுகளைக்
காலயிளம்பயிர்கள் தனையழித்ததினால்

மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லை
ஆறாலும்பாவிகள்தா னந்தாங்கஞ்சொல்லவொண்ணா

சூரியனைத்தோத்தரியாத் தோஷமதனாலும்
தீரிலுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுசுட்டதினால்

நடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால்
அடிக்கவுயிரோடதனைச் சுடுமணலிற்போடுவதால்

நல்நிழல்மரத்தை நாருரித்துக்கெண்டதினால்
வல்லமையாய்ப்பச்சை மரங்களவெட்டினதால்

பசித்தேதிருக்கவதைப் பாராமலுண்டதினால்
விசமாய்ச்சுரதோஷம் நேருமென்றேயுரைத்தார்

மாதாபிதாவைமனம்நோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைத்ததினால்

வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரொன்று பலரையும்பழித்தல்

தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்

ஊனுணவைத்தின்ன உயிர்வதைகள்செய்வதினால்
மானுககற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால்

புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியங்களைக்கெடுத்துத்
தண்ணீர்குளமேறி தன்னைபுதைத்துவிட்டும்

விருப்பதனைப்பதுவும் விரைகல்குறையவிற்று
மருப்பட்டாரீரில் மலமூத்திரங்கள்விட்டும்

அராகமாயிவ்வாறு துன்பங்கள்செய்தவர்கள்
பிராணிக்கழிச்சல்லுந்து கெடுவாரெனவுரைத்தார்

பொல்லாக்கடுங்கோபர் பொய்யேபிதற்றுரைக்குஞ்
சொல்லுவதைதன்மறத்துத் தூஷணித்துப்பேசுபவர்

உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும்
இண்டுமிண்டாச்சிவசெந்தை திரக்கவேகொன்றவர்க்கும்

கன்னத்திற்புக்கு கண்டேசிவிப்புருதி
கன்னத்திற்குலே கடிதானபல்லாலே

தந்தரோகங்கள் சக்கரியாவாய்புத்து
தந்தரோகஞ் சூலே தப்பாமல்வந்திடுமாம்

சற்குருவைதூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்

பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலேகா யுதிரவடித்தவர்க்கும்

வண்டுகடிக்குகரப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்மாமுனியும்

பத்தர்சிவசித்தர் பரமசிவயோகிகளைச்
சித்தங்கலங்கவே செய்ததொடுமபாவிகட்கும்

வில்லாலும்பாலும் வெடிமருந்துண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கட்டத்தாற்சிவசெந்தைக்

கொன்றகொடும்பாவிகட்கு கொடிதானமார்பாணி
கண்டமாலையினவை கழலாதம்வந்திடுமாம்

காங்கிசையாய்ப்பெண்கள் தமைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கிடவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும்

மின்னுரைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்னவரைத்தூஷணமாய்ப் பேசிப்பழித்தவர்க்கும்

தப்பிதமாகப்போய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும் தஅயி

பலநரமுயிர்வதைகள் பண்ணுவதைகண்டிருந்தும்
விலக்காமற்பாத்திருந்த வேட்டைநாயானவர்க்கும்

கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுதான்மறையும்
தொண்ணூற்றுயாறுநோய் தொடருமென்றார்மாமுனியும்

பேறானதேகமுயிர்ப் பிராணிதனைத்தான்பிடித்து
கூறாகத்தூக்கிவைத்துக் கொண்டகொடும்பாவிகட்கும்

கோவதனைக்கொன்றவர்க்குங் கொடிதானகண்ணிவைத்து
சிலசெங்கைநீர்த்துறையிற் சேதமேசெய்தவர்க்கும்

அலரும்பிராணிகளை யழுக்கியதன்றுடைய
தலையறுத்துமிக்ககுடல் தன்னையெடுத்தவர்க்கும்

ஈனமிறக்கமற்ற விராட்சதரையொத்தவர்க்கும்
ஆனந்தவாழ்வுவந் தழுக்குமெனவுரைத்தார்

இறந்தவேமுற்பிறப்பிற் செயிழைமார்தங்களுக்கு
மருந்தீடுசெய்து மயக்கிக்கற்பழித்தவர்போல்

மயலானபெண்போலே மறுஜென்மத்தினிலவளும்
சயரோகமாகவந்து சார்குவளெனவுரைத்தார்

மார்க்கமதிலிருக்கு மரங்களதனைவெட்டினவர்
பூக்கமழுநல்மரத்தின் புறத்தொளியைத்தானரிந்தோர்
வீணிலேபூக்களை விருட்சங்களைமுறித்தோர்
ஊணுகின்றகாலமுறித்தே யோடமுஞ்செய்தவர்கள் ருகூ
தம்பமாய்ச்சிலசெக்கின் சங்கங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துக் கொம்பாலஞ்செய்தவர்க்கு
வாசங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூதலுடனளிரும் குளிருமவருமென்றனரே
பலபேர்வயிறெரியப் பணமிலைவைத்தபாவிகட்கும்
கலஞ்சேர்பெரியோரை நடுங்கப்பேசினர்க்கும்
மாறுமனக்கவடு வைத்துவெகுபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்டசிக்கவுண்டவர்க்கும்
சண்டாளத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்துகூழுமென்றார்

பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலக்கவர்க்கேயெய்துமென்றார்

சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டுகளை
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார்

ஒப்பனையானவை.

வெடுக்கென்றசொல்லானை மேலோரகத்தில்வைத்தால்
மடத்தையுங்கட்டியதில் வங்குரங்கைவைத்ததொப்பாம்

எண்ணுமல்வஞ்சகப்பெண் ணின்சோலைநிச்சயித்தால்
மண்குதிரைதனைநம்பி யாற்றினிற்சென்றதொக்கும்

அகாமியமுள்ளாரெனினு மறிவாளரைசேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த மானைதனைநிகர்ப்பார்

தன்னவரோயானாலுஞ் சார்பறிந்துசேர்தல்நன்று
துன்னுசுடர்விளக்கெனினுந் தூண்டுகோல்வேணுமதாய்

கடவுள்விதிவெல்லர்க் கடவரெவராருமில்லை
மடலிலேயிட்டாக்கால் குடலிலேதாங்காதே

நிலையாமநிமலனடி நேர்ந்தார்க்குறையுளதோ
மலைமேலிருப்பவரை வந்துபன்றிபாய்ந்திடுமோ

பெரியோர்இருவுளந்தான் பேதித்தலார்தீர்ப்பார்
கரிமலைசாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ

கடத்தெருவுஞ்சொல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கில்சற்றுமொரு வோசைபரியாதே

மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துசொன்னாலும்
இட்டமுற்றதன்குணம்பேர் செய்யாதுறக்குணந்தான்

கடையாரால்மேலோர்க்குக் கருமங்களும்விழலாம்
முடப்பல்லுதண்ணீரில் முக்கலத்தையழிக்கும்

வலியோரைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சவரே
மலையேதான்லெக்கானால குருடனெய்யமாட்டானே

தலையானோரைச்சேர்ந்தால் தாழ்விலைதாழ்வுவந்தால்
புலிக்கடுமைபட்டுக் கறிக்காசைபட்டதொக்கும்

மெலிவாகிலுமேலோர் மேற்செயலேசெய்வார்
புலிபசித்தாலெப்போது புல்லருந்தமாட்டாதே

விற்பனமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே

நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால
ஊசியிலேகப்பாகி நூல்நுழையவாராகும்

ஏர்க்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றும்போகாது
ஊர்வாயைமூட வுலைமூடிதானுமுண்டோ

எட்டாக்கனியதனுக் கோசைபட்டுமென்ன
தொட்டுகட்டாதவித்தை சொட்டுபோட்டால்வருமோ

நாட்டுச்சுரைக்காய்கறிக்கு நாட்டினுலெய்துமது
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும்

மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றறிந்தால்
ஏறிவிட்டேயேணிதனை யெடுத்துவிட்டவாறாகும்

வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்நில்லா
ஏழைசொல்லம்பலமு மேறாதுகண்டீரே

கொடையாளியேவறுமைக் குள்ளாகிலுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே

விற்பனகுருமூடன் மேலாம்பரமானால்
குப்பையுயர்ந்து கோபுரந்தாழ்ந்ததொக்கும்

இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புதப்புங்காலம்
கெட்டவர்க்குற்றார் கிளைதனிலுமில்லையில்லை

இணக்கமுடன்நல்லபுத்தி யெவ்வளவுங்கேளார்க்குரைத்தல்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறாகும்

காலிபயிர்தின்னமற் காப்பதுவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை

நிலைபானகாரியமு நில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் முலைப்பால்மருந்தல்லவோ

கூடாவொழுக்கமளிர்.

பார்ப்பனவில்திரும்பிப் பாராளுரைத்தமொழி
கேளாய்மருவிகள மேதுவுமேசொல்லாளாம்

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமள்புரிவாள்
உள்ளன்புக்காரருடன்போயுஞ்சண்டைசெய்வாள்

ஆடையுடனாபரண மடைக்கால்முதல்கொடுத்தால்
நாடாள்புரங்கையி னாலதனைத்தட்டுவளாம்

அங்கையாற்றொட்டா லாடவரம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைப்போல்பார்ப்பாள்

அயலாருடனேவிளை யாடியேகூடுவளாம்
பயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தான்

மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டு
பொய்யாணைவிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள்

முந்தியுறங்கிப்பெரு மூச்சுவிட்டெத்தனையோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேயிறங்காள்

ஆரிடத்திற்போடாவென் றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள்

நாடாணதிற்பெண்கள் நான்குவகைசாதியிலுங்
கூடாவொழுக்கங் குறையிதுவாமென்றனரே

அபியுற்றமகளிர்.

ஆடவர்களொந்நாலு மாரைகொண்டபெண்குறிப்புங்
கூடாவொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம்

பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணாயிருப்பாள்
தலைவனவனைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள்

உள்ளன்புகாட்டா ளோங்கிபெருமூச்சுவிட்டாள்
தள்ளாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிட்டாள்

பாங்கியரைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்த்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி

பிறரெவரையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறகால்போய்மூக்கைப் பிசைந்தும்தும்மல்தும்மி

தலைவனவன்புதைத்தாலுந் தன்னுடன்பொய்யன்று
தலைவன்மொழிகேட்டுமவன் தன்தொழிலையுமகிழ்ந்து

ஆண்டவன்விட்டுக் கடிக்கடிதான்போவதல்லால்
ஆண்டவனைக்கண்டா லறக்கணிசினாணுதலும்

கொம்பனையார்க்குள்அன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூல்களில் முன்னோருரைத்தனரா

பெண்களுடையதத்துவம் பத்துக்கும்விபரம்.

மிக்கயின்னூலில் மேன்மைகுறிப்பறிய
தக்கதொருபெண்கள்பத்து தத்துவத்தைச்சொல்லுகிறோம்

பொன்னிறமும்மல்லிகையின் பூமணமுந்தாமரையும்
வன்னமலர்மகமு மாசற்றமுர்தமொழி

தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோடுவாழ்பவ ளிவன்தெய்வதத்துவமாம்

இரக்கம்வணக்க மின்பமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசுவாசம்

வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடர்க்குள்தத்துவமாம்
முன்சொல்லும்நூலதனில் முறையிலுரைத்தனரே

நித்திரைமிகுத்தல் நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி விடெல்லாம்போய்த்திரிதல்

சுத்தமில்லாதேகஞ் சுகமில்லாப்போசனமும்
நத்துக்கின்றமின்னாள் நரகததுவமாகும்

ஆற்றில்குளத்தி லலைகடலிலேமனையி
லேற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம்

நாணமில்லாமை யெந்நாளுங்கொடுங்கோபம்
வாணுதலாலேயியக்க மாதொன்றுசொல்லுவதாம்

பரிமளசுகந்தாதி பகிரத்தினவாபரணம்
சரசசங்கீதவித்தை தன்னில்வெகுவிருப்பம்

சார்ந்தஇனமுந் தர்மசிந்தைகற்புடையாள்
காந்தர்வதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம்

வெட்கமில்லாமை மிகுந்தபலபோசனமுந்
துற்கந்தவாசந் துடியானவார்த்தைகளும்

வட்டிணசரீர முடையமுக்குமாமிசமு
முட்டமதுவுண்ணல் முறையில்லாதுர்நடத்தை

நித்திரையில்லாமையிவை நேர்ந்தபெண்ணுமேபேயின்
தத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள்

அக்கினிக்கண்ணு மழகுசற்றுமில்லாமை
வக்கணையாயாடவரை வலியப்பிடித்திழுத்தல்

மாறுமாடானமன மல்லுகட்டிப்புணரும்
நாரியவள்தானே ராட்சதரின்தத்துவமாம்

ஆரிடத்திலானுலு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தால் மயிர்தூவுந்தூறுதலை

வேறுமுகப்பசியு மிகுந்தபயமுடையாள்
காகத்தின்தத்துவத்தில் கன்னியவளாகுமென்றான்

கூடுகின்றவாடவரை கூர்நகத்தாற்பல்லதனால்
நாடிக்கடிப்பதுவு நாணஞ்சலுமில்லாமை

நிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தால்மருட்டால்
குறங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றான்

திண்டுமிண்டானசொல் தேகசுத்தமில்லாமை
வண்டிவெடுத்தகுரல் மல்லுகட்டிப்புணர்தல்

மழுமாரிகண்டவரை வலியப்பிடித்திழுப்பாள்
கழுதையின்தத்துவத்தின் கன்னியவளாகுமென்பார்

வையகத்திலேமேலா மணவாளன்சொன்னபடி
மொய்க்குழலார்சாதி மூன்றுங்குறியுரைப்போம்

மானைநிகர்த்தவிழி வனசமலர்முகமும்
தேனைநிகர்த்தமொழி தேமற்படாதவுடல்

சுருண்டுநெறிந்தகுழல் தும்பிப்படைநடையுந்
திரண்டகோவைகனிவாய் செண்பகப்பூந்தேகமுமாம்

மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு மழகில்ரதியெனவும்

வட்டமாய்த்தங்கநிற மாணவிளமார்பும்
இட்டமுறுகல்விக் கிசைந்திட்டசற்குணமும்

தர்க்கமிடுமின்கோபி சாப்பாடுமற்பமதாம்
இக்குறியின்மாதவளு மின்பமுளமான்சாதி

பெட்டைக்குதிரைசாதி.

உயர்ந்துகுளிர்ந்தவுச்சியுட்குழிந்தகன்றகண்கள்
உயர்ந்துபருத்தகொங்கை யுதடுபெருத்திருக்கும்

சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலிடைபருத்துத் தாருபோலேவுயிரும்
அடக்கமொன்றுமில்லாவை யல்குல்பணைத்திருக்கும்
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்மைகுளறுதலாம
போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசும்புலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும்
நீராவெறுப்புஞ் சிவந்தபருவுதடுங்
கூறுனமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்லினனே

பிடியானைச்சாதி

சாலப்பருத்தகெற்றி தாடைசெவிநாசி
காலுடனேகைத்தாளுங் கழுத்துமிகப்பருத்து
கருண்டுசிவந்தமயிர் தொங்குமதரமுமா
மூரண்டுநிதஞ்சண்டை மொழியுமிடிபோலாய்
அல்லும்பகலும்கல்வி யானதிலேசிந்தையுமாய்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை
யார்க்குமனுகூலி யானைமதநாரி
பார்க்கும்பனிரண்டு அங்குலமாமல்குலது
விடியளவுஞ்சண்டைவிடாள் வெட்கத்துக்கஞ்சாளாம்
பிடியானைசாதியென்று பேசினார்முன்னோர்கள்
இன்னஞ்சிலநீதி யெடுத்துமேகூறலென்றால்
வன்னமாயிந்நூல் வளருமெனமுடித்தேன்

வாழி.

ஐங்கரனும்வாழி ஆறுமுகன்வாழி
மங்கைபாகன்வாழி மாயன்பிரமன்வாழி
தூயமுனிவோர்வாழி சுத்தசைவர்வாழி
நேயசெங்கோல்செலுத்தும் நிருபர்மிகவாழி
கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே

மதநீதிகாதல்.

முற்றிற்று.

கடவுள்துணை.

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
விநாயகர்துதி	௩
சரஸ்வதிதுதி	௩
அவையடக்கம்	௩
ஆக்கியோன்பெயர்	௪
நூற்பயன்	௪
வேதியரொழுக்கம்	௫
அரசரொழுக்கம்	௬
வர்த்தகரொழுக்கம்	௯
வேளாளரொழுக்கம்	௯
திருமநீதி	௯
மாரிச்சிறப்பு	௰
இல்லறம்	௰
செல்வநிலையாமை	௰௧
தெய்வச்செயல்	௰௧
சுகபோசனம்	௰௯
நற்சகோதரர்துற்சகோதரர்	௧௩
அரசரிற்புகழ்பெற்றோர்	௧௩
நல்லறிவு	௧௪
கொல்லாமை	௧௯
கொடுநரகமடைவோர்	௧௭
துஷ்டநிக்கிரகம்	௧௮
நல்லறிவு	௧௯
காலம்	௨௯
பிதா	௩௰
மைந்தர்	௩௰
சோசியம்	௩௧
இலட்சுமியிருப்பிடம்	௨௩
மூதேவியிருப்பிடம்	௨௩
பகை	௩௩
பகைவெறுப்பு	௩௪
சேரிடம்	௩௪

பெயர்.	பக்கம்.
செல்லாவிடம்	௩௫
யோகம்	௩௫
மனவூக்கம்	௩௬
அளவிடாமை	௩௬
உதவி	௩௭
உதவாமை	௩௮
நற்பிறப்புத்தமர்	௪௰
துற்புறப்புத்துற்சனர்	௪௩
நிரை	௪௪
ஈகை	௪௪
ஈகைக்கிடையூறு	௪௪
சிநேகம்	௪௫
சரீரசுகம்	௪௫
நோயணுகல்	௪௭
இறந்துமிறவாதவர்	௪௯
இருந்துமிறந்தவர்	௪௯
பொருளின்பலன்	௪௭
பொருள்வகை	௪௮
நல்லறிவுகயவர்	௪௮
புல்லறிவுகயவர்	௪௯
வரம்பிலாமை	௫௰
புல்லறிவு	௫௧
பண்டிதாள்பரிட்சை	௫௧
சுத்தம்	௫௨
ஆகாமை	௫௩
பலநில்லாமை	௫௫
லோபத்தனம்	௫௮
இசழ்ச்சியீனம்	௬௰
வெளிவிடக்கூடாமை	௬௰
கேடு	௬௧
அரிது	௬௩

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
இனிது	௬௩
கொடிது	௬௩
பெரிது	௬௪
முக்கியமுள்ளது	௬௪
கொடுமையாலழிந்தவர்	௬௫
தாசியங்கம்	௬௬
வேசையர்கள்வரலாறு	௬௬
பெண்களால்பங்கமடைந்தவர்	௬௭
புருஷன்வாக்ய பரிபாலனஞ்செய்தவர்	௬௭
மூன்றுயுகத்திலும்யமனுனே	௬௭
பெண்களுக்குச் சுவாதீன மில்லையெனல்	௬௭
பெண்கள்வரலாறு	௬௮
கர்மகாண்டம்	௬௮
ஒப்பனையானவை	௭௨
கூடாவொழுக்கமகளிர்	௭௪
அன்புற்றமகளிர்	௭௫
பெண்களுடைய தத்துவம்பத்துக்கும் விபரம்	௭௫
பெட்டைக்குதிரைசாதி	௭௭
பிடியானைச்சாதி	௭௮
வாழி	௭௮

கடவுள் துணை.

அறிக்கை.

இவ்வுலகின் மாட்சிமைதங்கிய நேசர்களே முன்னோர்களாளுண்டான நீதிநூல்களிற் சொல்லியசாரங்களைத் தெளிந்தெடுத்துச் சகலருக்கு முபயோகமாகும்பொருட்டுச் செய்யுளாகவியற்றி மனுநீதிசாதலென்று பெயர்கொடுத்திருப்பதால் இந்நூலை இந்நாட்டிலுந் தென்னாட்.டிலுந் தென்னாட்டிலுமுள்ள தமிழ்பாடசாலை உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்குக் கற்பிப்பார்களாகில் நீதிகளை எளிதிலறிவார்கள் வேர்நூல்பார்க்க வேண்டுவதில்லை இதன்றிகற்றவர்களும் கனவான்களும் தனவான்களும் இதைப்பார்வையிட்டால் வெகுவிஷயங்களை எளிதிலறியலாம்.

மனுநீதிகாதலின் அட்டவணை

முற்றிற்று.